R & C PROPERTY LAWYERS LLP
& NOTARY PUBLIC
10a Upper Tooting Road , London SW17 7PG
Telephone: 02087724920
Conveyancing Services:
Residential , Commercial Conveyancing ,
Notarial Services:
Notarisation & Legalisation of Documents
Power of Attorneys,
SENTHURAN THAVARAJA LLB (Hons) Solicitor & Notary Public
Consultant : RAJA THAVARAJA LLB Solicitor

A Freely Circulated Monthly
# புதினம்
PUTHINAM
AUGUST 2019
மலர் 24
இதழ் 8

L&L LAW SOLICITORS
1. Immigration and Asylum
2. Human Rights Act challenges and European Law
3. Family Law
4. Criminal Law
5. Landlord and Tenants
6. Civil Litigation
7. Public Law
46 High street
London SW19 2BY.
Tel: 020 8544 9285
Fax: 020 8542 9530
Email:llsolicitors@hotmail.com
Although this is a new firm of solicitors, it is run by experienced legal practitioners of over 25 years standing.

லண்டனில் முதலாவது தமிழர் நகை மாளிகை
WESTERN Jewellers
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
Tooting Branch:
230 Upper Tooting Road,
London Sw17 7EW
Tel : 02087673445
Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, MiddX HAO 4YA
Tel : 02089030909

THARANI JEWELLERY
அதி குறைந்த வட்டி வீதத்தில்
அடைவு பிடிக்கும் நகை மாளிகை
54 Ealing Road, Wembley, Middlesex HA0 4TQ.
Tel: 020 8902 7111, 020 8902 6777

# மீண்டும் பௌத்த வாதம்!

பௌத்த மதவாதம் இலங்கையில் மீண்டும் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளது.

இன்றல்ல, நேற்றல்ல–

நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்,

1959 ஆம் ஆண்டு, ஆட்சி நடாத்திய எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா கைகூப்பி வணங்கி, சோமராம தேரோ, புத்தரகித்த தேரோவை வரவேற்றபோது சுட்டுக் கொன்றபோதே பௌத்த மதவாதம் ஆரம்பமாகிவிட்டது! இப்போது மீண்டும் இலங்கையில் ஞானசார தேரர், அத்துரலிய ரத்ன தேரர் பிக்குகள் வடிவத்தில் உருப்பெற ஆரம்பித்துள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக சிறைக்குள் தள்ளப்பட்டு கம்பிகளை எண்ணிக் கொண்டிருந்த ஞானசாரதேரருக்கு 'பாவமன்னிப்பு' வழங்கி விடுதலையாக்கினார் மைத்திரி. வெளியே வந்த தேரர் அடங்கினாரா? அவரது அட்டகாசமும், வெறிச் செயலும் அளவுக்கு மீறியது!

அரசியலில் எதிரிகளாக முட்டிமோதி 'அடித்து'க்கொள்ளும் ரணில், மைத்திரி, மகிந்தா, ஜே.வி.பி.யினர் போன்ற இலங்கையின் எதிர்கால ஆட்சிப் பொறுப்பை தம் கையில் எடுத்துக் கொள்ளப் போராடும் சிங்களத் தலைவர்கள், ஞானசார தேரர் போன்ற பிக்குகளின் வன்செயல்களைக் கண்டிக்காது, கண்டிக்காமல் அமைதி காப்பது, அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாக அமைந்திருக்கிறது. எது எப்படியாயினும், பௌத்த மத வாதமே சிங்கள அரசியல் தலைவர்களின் அதிகார வெறிக்குத் தீனி போடும் மாபெரும் சக்தியாக மாறிக் கொண்டிருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தினத்தில், சிங்கள பௌத்தத்திற்கு எதிராக எதுவும் இல்லாததால், ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாது ஒரு புறமிருக்க, இது இஸ்லாமிய அடிப்படை வாதம் என இலங்கையில் ஒன்றிருப்பதை வெளிக்காட்டியது.

தமிழ் தேசிய வாதம், சிங்கள இனவாதம், இஸ்லாமிய அடிப்படை வாதம் என்பவைகளுக்கு அப்பால் இப்போது தமிழர் தாயகத்தைச் சிதைக்கும் பௌத்த மத வாதம் தலைதூக்கத் தொடங்கியுள்ளது.

சைவக் கோயில்களை இலக்கு வைத்து நடாத்தப்படும் தாக்குதல்கள் தொடர்கிறது. முல்லைத் தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் பகுதியில் விகாரை–கிழித்து எறியப்பட்ட நந்திக் கொடி விவகாரம்– திருகோணமலை கன்னியா பிள்ளையார் ஆலயப் பகுதியில் விகாரை நிறுவ முயற்சி. இந்த ஆலய நிர்வாகிகள் மீது எச்சில் தேநீரை வீசிய பிக்குகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு.

வடக்கில் 500 விகாரைகள் அமைக்கப்படுமென ரணில் அறிவிப்பு.

கல்வியும், மொழியும், பண்பாடும், நிலமும் உயிராக– சமய கலை, கலாசார அடையாளங்களுடன் தலை நிமிர்ந்த இனமாக வாழ தமிழர் தாயகத்திற்காகப் போராடிய தமமீழத் தேசியத் தலைவரின் லட்சியம் என்பதை ஈழத் தமிழர்கள் இலகுவாக மறந்து விட முடியாது.

அந்த அழகான எங்கள் பூமி சிதைக்கப்படுவதை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்? •

YOUR TUITION SOLUTION
GCSE Biology & Chemistry New (9-1)
Expert tutoring
Small Groups
Starting September 2019
07508516737
Mrs. Siva PhD
(CROYDON)

செல்வராஜா கோல்டு ஹவுஸ்
Tooting Broadway
கோடைக்கால விடுமுறைக்கு
புடவைகள் அனைத்தும்
அதிரடி மலிவு விலையில்
162 B, MITCHAM ROAD, LONDON SW17 9NJ
TEL: 020 87673795

டயபட்டிஸ் சலன்ஞ்
ஹோமியோபதி மருத்துவம் + உங்கள் ஒத்துழைப்பு
100% கட்டுபடுத்தலாம்
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
மருத்துவ ஆலோசனைக்கு: 02081441553
Viber: 0044 7833341693 skype: homoeocare
வெப்சைட்: www.homoeocare.com இமெயில்: homoeocare@rediffmail.com

தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448







# இலண்டன் திருவருள்மிகு ஸ்ரீசிவன் திருக்கோயில்

## LONDON SIVAN KOVIL TRUST

4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 FAX: 02083182108
www.londonsivankovil.org.uk, Email:sivan.kovil@yahoo.co.uk–Charity Reg: 1051516

## மஹோற்சவ விழா விஞ்ஞாபனம்

**கொடியேற்றம்**
23.08.2019 வெள்ளிக்கிழமை
பகல் 10.00 மணி

**தேர்த்திருவிழா**
08.09.2019 ஞாயிற்றுக்கிழமை
பகல் 10.00 மணி

**தீர்த்தத்திருவிழா**
09.09.2019 திங்கட்கிழமை
பகல் 10.00 மணி



*இலண்டன் லூய்ஷியம் நகரில் அருளாட்சி செய்யும் திருவருள்மிகு சிவன் மஹோற்சவ விழா 23.08.2019 வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று, 08.09.2019 ஞாயிற்றுக்கிழமை பகல் 10மணிக்கு தேர்த்திருவிழாவும், 09.09.2019 திங்கட் கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், 13.09.2019 வெள்ளிக்கிழமை வைரவர் பொங்கல் விழாவுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது.*

### மஹோற்சவ நிகழ்வுகள்

22.08.2019 வியாழன் பிள்ளையார் திருவிழா
23.08.2019 வெள்ளி கொடியேற்றத் திருவிழா (பகல் 10 மணி)
24.08.2019 சனிக்கிழமை தொடக்கம் 07.09.2019 வரை காலை 8 மணி முதல் இரவு 9 மணிவரை சிறப்பு பூஜைகளுடன் திருவிழாக்கள் நடைபெறும்.
08.09.2019 ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழா
09.09.2019 திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவம்
10.09.2019 செவ்வாய்க்கிழமை பிராயச்சித்த அபிஷேகம்
11.09.2019 புதன்கிழமை மாலை பூங்காவனத் திருவிழா - திருக்கல்யாணம்
12.09.2019 வியாழக்கிழமை மாலை 109 கலைச்சங்குகள் அபிஷேகம்
13.09.2019 வெள்ளிக்கிழமை மாலை வைரவர் பொங்கல் விழா

**மஹோற்சவ காலங்களில் விசேட தீபாராதனை, கிரியா விளக்கம், கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். தேர் உற்சவம் பொது உபயமாகும். எனவே, அடியார்கள் இதில் பங்கு பற்ற விரும்பினால் உங்கள் நட்சத்திரம்-பெயர் என்பனவற்றை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.**

பனங்காட்டான்

# அரசியல் தலைமைப் பதவிகளுக்கு உச்ச வயதெல்லை நிர்ணயமாகுமா?

இலங்கையில் அடுத்ததாக மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமா அல்லது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுமா என்று தேர்தல் ஆணையத்தால்கூட அறுதியிட்டுக் கூற முடியாத அரசியல் களேபரம் அங்கு உருவாகியுள்ளது.

ஒவ்வொரு அரசியல் கட்சியும் இரண்டு மூன்று பிரிவுகளாகத் தனித்து நின்று தாம் விரும்பியவாறு ஒவ்வொன்றைக் கூறி வருகின்றன. மொத்தத்தில் ஒவ்வொரு அரசியல்வாதியும் புதுப்புது செய்திகளுக்குத் தீனி வழங்குபவர்களாக மாறியுள்ளனர்.

ஜனாதிபதி சொல்வதை மறுத்து பிரதமர் ஒன்று கூறுவார். அவர் சொல்வதற்கு ஏறுமாறாக அவரது கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் கருத்து கூறுவர். எல்லாமே ஊடகங்களுக்கு பரபரப்பான செய்திகள்.

இவர்களுக்கப்பால் மகிந்த தலைமையிலான பொதுஜன முன்னணி, சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பு, மனோ கணேசனின் தமிழர் கூட்டணி, ஜே.வி.வி. மற்றும் சொரியல்கள் தனித்தனியாக தங்கள் அபிப்பிராயங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பர். பாவம் அப்பாவி மக்கள்.

ஞானசார தேரரின் பொதுபல சேன தனிச்சிங்கள பௌத்த இராச்சியம் கேட்கிறது. பெயரளவில் அப்படியில்லாவிட்டாலும் இப்போது இலங்கையில் அந்த ஆட்சிதானே நடைபெறுகிறது.

மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளின் சொல்லை மீறி எதையும் செய்வதற்கு மைத்திரி, மகிந்த, ரணில் ஆகியோரில் எவரும் தயாரில்லை. இப்போது இந்தப் பட்டியலில் சஜித் பிரேமதாசவும் இணைந்துள்ளார்.

தமிழருக்கு எதிராக நேற்றுக் குரல் கொடுத்த சிங்கள பௌத்த ஏகாதிபத்தியம், இப்போது இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கிளம்பியுள்ளது. சமகாலத்தில் இந்து - சைவ ஆலயங்களையும் இவர்கள் மறந்துவிடவில்லை.

பௌத்த பிக்குகளின் கைவரிசையிலிருந்து இந்து - சைவ ஆலயங்களைக் காப்பாற்ற நீதிமன்ற இடைக்காலத் தடையுத்தரவுகள் மட்டுமே உதவுகின்றன. இவைகளுக்கு நிரந்தரமான தடையுத்தரவு கிடைக்குமென்பது சந்தேகம்.

இலங்கையின் வடக்கே 500 பௌத்த வழிபாட்டுத் தலங்களை புதிதாக நிர்மாணிக்கப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தினார்.

அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு விரும்பும் சஜித் பிரேமதாச ஒருபடி மேலே சென்று 1,123 பௌத்த விகாரைகளையும், 1000 பௌத்த சமயப் பாடசாலைகளையும் அமைக்கப் போவதாக அறிவித்துள்ளார். கண்டியில் கடந்த திங்கட்கிழமை மகாநாயக்கர்களைச் சந்தித்த பின்னர் இதனை அறிவித்த சஜித், நாட்டிலுள்ள அனைத்து தொல்பொருள் பெறுமதிமிக்க புண்ணியத் தலங்களையும் பாதுகாக்கப் போவதாக அறிவித்துள்ளார்.

திருமலை கன்னியா பிள்ளையார், செம்மலை நீராவியடிப் பிள்ளையார் பிரச்சனைகளின் ஊற்றுவாயாக உள்ளதே இந்தத் தொல்பொருள் திணைக்களம்தான். இவற்றுக்குத்தான் நீதிமன்ற இடைக்கால தடையுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

இதனைத் தெரிந்து கொண்டும் பௌத்த மத நிலைப்படுத்தலுக்கு தொல்பொருள் திணைக்களத்தை துணைக்கு இவர் அழைப்பது ஆபத்தானது.

1958ஆம் ஆண்டு இனவழிப்புக்குப் பின்னர் எத்தனை இந்து - சைவ ஆலயங்களை சிங்கள அரசும் அவர்களின் காடையர்களும் நிர்மூலமாக்கினர். இதுவரை ஆகக்குறைந்தது ஓர் இந்து சைவ ஆலயத்தையாவது இலங்கை அரசாங்கம் நிறுவி இன மத உறவை வளர்க்க முன்வந்ததா? இல்லவேயில்லை.

திட்டமிட்டு நடத்தப்பட்ட 1983இன் இனவழிப்பில் 36 ஆண்டுகள் முடிவடைந்தும் அதன் பாதிப்புக்கு இதுவரை நிவாரணமில்லை. கொல்லப்பட்ட 1800 தமிழர்களின் குடும்பங்களை அரசாங்கம் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

**ஜனாதிபதிப் பதவிக்கு குறைந்த வயதெல்லையாக 35ஐ நிர்ணயித்ததைப்போல, ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளுக்கு மட்டுமன்றி அரசியல் கட்சிகளின் தலைமைக்கும் உச்ச வயதெல்லையை நிர்ணயித்தால் தேசிய பிரச்சனையை சமூக விஞ்ஞான கண்ணோட்டத்தில் தீர்ப்பதற்கு வாய்ப்பு ஏற்படலாம். இல்லையேல், இலங்கை அரசியல் என்பது வயோதிபர் மடமாகவே தொடரும்.**



புலம்பெயர்ந்த தமிழர்கள் தத்தம் நாடுகளில் இதனை நினைவு கூர்வதால் மட்டுமே இந்த இனவழிப்பு பதிவுபெற்று வருகிறது.

தாயகத்தில் இதனை நினைவுறுத்தி ஒரு தீபம் ஏற்றுவதற்குக் கூட நேரமில்லாத தமிழ் அரசியல் தலைமைகள், அடுத்த ஜனாதிபதி யார் என்ற தேடலில் தம்மை ஈடுபடுத்தி வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு முண்டு கொடுத்து வரும் கூட்டமைப்பு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவரை வேட்பாளராக ஐக்கிய தேசிய கட்சி நிறுத்தாவிட்டால், சஜித் பிரேமதாசவையோ அல்லது வேறொரு அபேட்சகரையோ - அது மகிந்த அணியாகவிருந்தாலும் ஆதரிக்குமா என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெவ்வேறு இடங்களில் அண்மையில் தெரிவித்த கருத்துகள் உள்வாங்கப்பட வேண்டியவை.

தங்கள் கோரிக்கைகள் தொடர்ந்து இந்த அரசினால் புறக்கணிக்கப்படுமானால் ஐக்கிய தேசிய கட்சிக்கு வழங்கும் ஆதரவை விலக்கி, மகிந்த ராஜபக்ச தரப்புக்கு ஆதரவு வழங்க வேண்டி வருமென மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான சீ.யோகேஸ்வரன் அறிவித்துள்ளார். இது கிழக்கின் ஒரு குரல்.



கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த அரசுக்கு ஆதரவு வழங்குகிறார்கள் என்பதற்காக அவர்களை அரசின் அடிவருடிகள் எனக்கூறக்கூடாது என்று கர்ச்சித்துள்ளார் மன்னார் மாவட்ட எம்.பி.யும் ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன்.

சிங்கள அரசு வழங்கிய நாடாளுமன்ற உபகுழுக்களின் தலைவர் பதவியையும் அதன் சலுகைகளையும் தொடர்ந்து வைத்திருக்க விரும்பும் அடிவருடித்தனமான செயற்பாட்டின் சின்னமாக விளங்கும் ஒருவரின் அர்த்தமற்ற குரல் இது. சிலவேளை ரணில் ஓரங்கட்டப்பட்டால் குதிரையோட்டத்துக்குத் தயாராகும் அறிவிப்பாகவும் இதனைக் கொள்ளலாம்.

முல்லைத்தீவிலிருந்து மூன்றாவது குரல் வந்துள்ளது. அமைச்சர் சஜித் பிரேமதாசவின் நிகழ்வொன்றில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் எம்.பி.யான சிவமோகன் கொஞ்சம் விபரமாக தனது கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழர்களுக்கான பிரச்சனைத் தீர்வை முன்னிறுத்தி ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாச போட்டியிட்டால், தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை இவருக்கு வழங்குவார்கள் என்பது சிவமோகனின் கூற்று. இது சஜித்தை குளிர வைக்கும் அறிவிப்பு.

கூட்டமைப்பு சஜித்தை ஆதரிக்கும் என்று சொல்லாமல், தமிழ் மக்கள் ஆதரவை வழங்குவார்கள் என்ற கூற்று



முக்கியமான உள்ளர்த்தத்தைக் கொண்டது.

"அடுத்த தேர்தலில் கூட்டமைப்பினர் கூறுவதைக் கேட்டு தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள். அந்தக் காலம் மலையேறி விட்டது. கொள்கை அடிப்படையில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முன்வருபவரை அவரது வாக்கின் நேர்மையைக் கருதி தமிழ் மக்கள் சுயமாகவே சிந்தித்து வாக்களிப்பர்" என்பதே சிவமோகனின் கூற்றில் உட்பொதிந்துள்ள கருத்து.

மறுபுறத்தில் மகிந்த அணியும் மைத்திரி அணியும் தங்களின் ஜனாதிபதி வேட்பாளர் யாரென்பதைக் கண்டுபிடிப்பதிலும் அறிவிப்பதிலும் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றன. பல சுற்றுப் பேச்சுகள் பயனின்றித் தொடர்கிறது.

ஆகஸ்ட் 12ஆம் திகதி தங்கள் வேட்பாளர் யாரென்பதை மகிந்த ராஜபக்ச அறிவிப்பாரென்று கூறப்படுகிறது. கோதபாயவுக்கு ஆதரவாக உள்வீட்டில் பலர் இருப்பினும் அவர் மீதான வழக்கு விசாரணைகளும், அமெரிக்க இரட்டைப் பிரஜாவுரிமையும் தடைக்கற்களாகவுள்ளன.

அதுமட்டுமன்றி, கோதபாய ஜனாதிபதியானால் தமது சொல்லுக்குக் கட்டுப்படாது இராணுவப் பாணியில் இயங்குவாரென்ற அச்சம் மகிந்தவுக்கு நிரம்பவேயுண்டு.

முன்னர் தீர்மானித்தவாறு சமல் ராஜபக்ச ஜனாதிபதிப் பதவிக்கும், மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவிக்கும் தெரிவு செய்யப்படுவரென்று அவர்களது அணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார அறிவித்துள்ளார்.

அண்ணனுக்கும் தம்பிக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளா என்று பல கோணங்களிலிருந்தும் எதிர்க்குரல்கள் கிளம்பியுள்ளன.

பத்தொன்பதாவது அரசியல் திருத்தம் ஜனாதிபதி பதவிக்கான ஆகக்குறைந்த வயதை 35 ஆக்கியதால் மகன் நாமல் ராஜபக்சவை போட்டியில் நிறுத்த முடியாத நிலையில், மனைவி சிராணியை நிறுத்த மகிந்த நாட்டம் காட்டுகிறார்.

ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் ரணில்தான் என்றிருந்த நிலை இன்றில்லை. சஜித் பிரேமதாசவுக்கு கட்சிக்குள் கணிசமான ஆதரவுண்டு.

இதனால், ஐக்கிய தேசிய கூட்டணியின் பங்காளிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து வேட்பாளர் முடிவெடுக்கப்படுமென தந்திரோபாயமாக ரணில் அறிவித்துள்ளார்.

ரணிலின் பெரியதந்தையான ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாகவிருந்தபோது ரணசிங்க பிரேமதாசவை பிரதமராக நியமித்தார். ஜே.ஆரின் பதவிக்காலம் முடிய ஜனாதிபதிப் பதவி பிரேமதாசவுக்கானது.

அதேபோன்ற ஒரு நிலைமையை ஏற்படுத்த ரணில் முயற்சிக்கிறார். இம்முறைத் தேர்தலில் தம்மை ஜனாதிபதியாக நிறுத்தி சஜித் பிரேமதாசவை பிரதமராக்கினால், எதிர்காலத்தில் தந்தையைப் போல சஜித் ஜனாதிபதியாகலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுவதே ரணிலின் தந்திரோபாயம்.

ரணிலின் இந்தக் கணக்குக்கான விடை ஆகஸ்ட் 6ஆம் திகதி தெரிய வரும். அரசியல் சாணக்கியரான ரணில் அதிகம் அலட்டத் தெரியாதவர். ஆனால், அரசியல் காய்களை சாதுரியமாக நகர்த்தத் தெரிந்தவர்.

தான் வளர்த்த வடலி மரமான பின்னர் அதில் கள் குடிக்க விரும்புபவர், இன்னொருவர் அதனைக் குடிப்பதை அனுமதிக்க மாட்டார். இதுதான் ரணிலின் மனநிலை.

இவ்விடயத்தில் ஒரு மாற்றம் வரவேண்டுமானால், ஜனாதிபதிப் பதவிக்கு ஆகக்குறைந்த வயதெல்லையாக 35ஐ நியமித்ததுபோல, இப்பதவிக்கு மட்டுமன்றி சகல அரசியல் தலைமைப் பதவிகளுக்கும் உச்ச வயதெல்லையாக ஆகக்கூடியது 70 நியமிக்கப்பட வேண்டும்.

வயோதிபர் மடமாகியுள்ள அரசியல் அரங்கின் தலைமைகள் இந்த அதிரடி மாற்றத்துக்கு உடன்பட மாட்டார்கள். மாற்றம் ஏற்படாதவரை இலங்கை அரசியல் என்பது நாற்றமெடுக்கும் கூவம்தான். ●

# புதினம்
PUTHINAM

லண்டன் தமிழர்களின்
அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:
ஈ.கே.ராஜகோபால்
E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:
PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk



TOOTINGஇல்
அலுவலகம் கடை
வாடகைக்கு

TOOTINGHIGH STREETஇல்
இரு அலுவலங்களுக்கு ஏற்ற இடம்
வாடகைக்கு உண்டு.
கடை ஒன்றும் போடுவதற்கு ஏற்ற இடம்.
விபரங்களுக்கு
சாமி: 0742 4639666




## சிக்காகோ
## தமிழாராய்ச்சி மாநாடு

10வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு அமெரிக்காவில் சிக்காகோ நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது. உலகில் பல நாடுகளிலிருந்தும் 5 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பார்வையாளர்களாகப் பங்கு கொண்டனர். வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை, உலகத் தமிழாராய்ச்சி மன்றம், சிக்காகோ தமிழ்ச் சங்கம் ஆகியவை இணைந்து நடாத்திய வரலாற்று நிகழ்வு என்று பெருமைப்படலாம். லண்டனிலிருந்து பார்வையாளர்களாக சிலர் பங்குபற்றினர். கணனி மூலம் தமிழ் கல்வி அறிஞர் சிவா பிள்ளையின் கட்டுரை தேர்ந்தெடுக்கப்பட்டதால், அழைப்பாளராக லண்டனிலிருந்து கலந்து கொண்டார். மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் தொண்டர்கள் அன்பாக கவனித்தனர்.

## உயர்வாசற்குன்று முருகன் கோவில்
## HIGHGATEHILL MURUGAN TEMPLE

200A, Archway Road, London N6 5BA Tel: 020 8348 9835 Fax: 020 8482 6508

### திருவிழாக்களும் விசேட பூசைகளும்
### Auspicious Days, Special Poojahs & Festivals - 2018

### AUGUST-2019 நடைபெறும் நிகழ்வுகள்

| | | | |
|---|---|---|---|
| 03 | Saturday | Aadi Pooram • | ஆடிப்பூரம் • |
| | | 7.00 pm Sri Durkai Ambal Abishekam, Pooja | இரவு 7 துர்க்கையம்பாள் அபிசேகம் பூசை |
| | | Sri Durha Veethi Ula | துர்க்கை வீதியுலா |
| 04 | Sunday | Chathurthi Viratham • | சதுர்த்தி விரதம்• |
| 05 | Monday | Sasti | சஷ்டி விரதம் |
| 09 | Friday | Sri Varaluxmi Viratham, Thiruvilakku Poojah | வரலக்சுமி விரதம், திருவிளக்குப் பூசை |
| | | Mor: Sri Ganapathi, Sri Murugan Abishegam | காலை: கணபதி, முருகன் அபிசேகம் |
| | | 6.45 pm Sri Durga Abishekam & Pooja | மாலை 6.45 துர்க்கை அபிசேகம், பூசை |
| 10 | Saturday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 12 | Monday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 14 | Wednesday | Full Moon • | பூரணை விரதம் • |
| 19 | Monday | Maha Chankadakara Chathurthi• | மகா சங்கடகர சதுர்த்தி |
| 21 | Wednesday | Sasti | சஷ்டி விரதம் |
| 23 | Friday | Karthikai Viratham • Sri Krishna Jeyanthi | கார்த்திகை விரதம் • கிருஷ்ண ஜெயந்தி |
| | | Apara Ashtami | அபார அட்டமி |
| 26 | Monday | Ekaathasi Viratham | ஏகாதசி விரதம் |
| 28 | Wednesday | Prathosa Viratham | பிரதோச விரதம் |
| 29 | Thursday | Amaavaasai Viratham | அமாவாசை விரதம் |
| | | Nallur Murugan Chariot Festival | நல்லூர் கந்தன் தேர் திருவிழா |
| | | Eve: Sri Shanmuga Archanai & Veethi Ula | முன்னிட்டு மாலை சண்முகர் அர்ச்சனை, வீதியுலா |




# விமலின் பக்கம்



தமது குழந்தைச் செல்வங்களைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து அடுத்த தலைமுறையினராக அவர்களை உருவாக்கும் விஷயத்தில் ஈழத்தில்- தமிழ்நாட்டில்- புலம்பெயர் நாடுகளில் வேறுபாடுகள் அவ்வளவாக இல்லை.



ஆனாலும்- மேனாடுகளில் தன்னந்தனியாகக் குடும்பம் நடத்தும் இளம் தமிழ் தம்பதிகள் குழந்தைகளை வளர்க்க எதிர்கொள்ளும் சிரமங்கள் பல. தம்பதிகளின் மூத்த தலைமுறை பெற்றோர் பெரும்பாலும் அவர்களுடன் வாழ்வதில்லை. கையுதவிக்கு ஓர் இளைய சகோதரியோ, அயல் வீட்டு அன்னம்மா ஆச்சியோ, காரை ஓட்டும் சோமபாலவோ இங்கு கிடையவே கிடையாது.

இத்தனை பிரச்னைகளுக்கு மத்தியில்- தம்பதிகள் இருவருமே தத்தம் தொழில்களுக்குப் போய்- போகும் வழியில் பள்ளிக்கூடத்தில் இறக்கிவிட்டு பிற்பகலில் மீண்டும் வீட்டுக்கு அழைத்து வந்து அவர்களின் ஹோம் வொர்க்-ஐ(வீட்டு வேலை) மேற்பார்வை செய்து வியாழக்கிழமைகளில் பஜன்; வெள்ளிக்கிழமைகளில் ஆலய வழிபாடு: சனிக்கிழமைகளில் தமிழ் கிளாஸ்- ஞாயிற்றுக்கிழமைகளில் சங்கீத - நாட்டிய வகுப்புகள். மறுநாள் மீண்டும் திங்கட்கிழமை பள்ளிக்கூடம்!

இப்படி வாரத்தில் ஏழு நாட்களுமே தமது குழந்தைகளுக்காக 16/17 வருடங்கள் பாடுபடும் பெற்றோர் மனதில் நியாயமான எதிர்பார்ப்புக்கள் துளிர்விடுவது இயற்கைதான். பிள்ளை மெடிசின் படிக்க யூனிக்குத் தெரிவாக வேண்டும்- படிப்பு முடிஞ்சு மருத்துவ கலாநிதி பட்டத்தோடு வந்த பிறகு கொளுத்த சீதனத்துடன் ஒரு பணக்கார வீட்டில் சம்பந்தம் செய்ய வேண்டும்- இவையெல்லாம் தமிழ் பெற்றோர்களின் வழமையான கனவுகள்.

இந்தக் கனவுகளை தவிடு பொடியாக்குவதாக பெற்றோர் அஞ்சும் ஒரு கெட்ட வார்த்தை "காதல்"! இதனால் "காதல்" பெற்றோரால் கடுமையாக எதிர்க்கப்படுகிறது.

யூனிக்குப் போகும் தமது மகளோ- மகனோ காதலுடன் வந்தால் பரவாயில்லை. ஆனால், எங்கட இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால் நல்லது என்ற அளவுக்கு பெற்றோர் இறங்கி வந்து தம்மைத் தாமே சமாதானப்படுத்திக் கொள்கிறார்கள் - பாவம் அவர்கள்!

இன்னும் சில எம்மவர் இல்லங்களில் யூனிக்குச் சென்று திரும்பும் எமது செல்வங்கள் வெறும் பட்டங்களுடன் மட்டுமே திரும்பி வருகின்றனர்.

"காதல் - கத்தரிக்காய்" என்று அவர்கள் எந்தக் கதையும் ஆரம்பிப்பதே இல்லை. பட்டத்தோடும் கைநிறைய சம்பளத்தோடும் வீட்டுக்குத் தனியாகத் திரும்பி வந்துள்ள தமது இளசு- தமது வயிற்றில் பால் வார்த்திருப்பதாக பெற்றோர் மகிழ்ச்சி அடைய ஆரம்பிக்கும் நேரத்தில் கல்யாணப் பேச்சுக்கள் ஆரம்பமாகின்றன. பத்திரிகைகள் மூலமாகவும் தொலைபேசி அழைப்புகள் மூலமாகவும் தரகர்கள் மிகவும் சிறப்பான சம்பந்தங்களைக் கொண்டு வருகிறார்கள்.

இந்தச் சம்பந்தம் பொருந்தி வந்தால் சிலோனுக்குப் போய் கொழும்பில் பெரிய ஹோட்டலில் கோலாகலமாக கல்யாண வீட்டை நடத்தலாம் என்று மனக்கோட்டை கட்டுகிறார்கள் பெற்றோர்.

ஒரு பிரிட்டிஷ் பவுண் நாணயத்தின் பெறுமதி இலங்கையில் 230 ரூபாவையும் தாண்டிப் போய்க் கொண்டிருப்பதால் கொழும்பு திருமண திட்டங்களும் வெவ்வேறு வடிவங்களில் அதிகரித்த செலவுகளில் சேர்க்கப்படுகின்றன.

"திருமணத்துக்குப் பெண் பார்க்க பெண்ணின் வீட்டுக்குப் போவதா? அல்லது கோவில்- அரங்கேற்ற நிகழ்ச்சி போன்ற பொது இடங்களில் பெண் பார்க்கலாமா? பெண்ணை அவளது வேலை இடத்தில் போய் சந்திப்பதா?"

இப்படி பல்வேறு யோசனைகள் மாப்பிள்ளை குடும்பத்திலும் பெண்ணின் குடும்பத்திலும் அடிபடுகின்றன.

ஆனால், மாப்பிள்ளையிடம் யாருமே சம்மதம் கேட்பதில்லை. "பெண் பார்க்க எப்போ போகலாம்?" என்று மட்டுமே கேட்க- "நான் கலியாணத்துக்கு இன்னமும் ரெடி இல்லை!" என்று பதில் வருகிறது. இப்படியே எல்லா சம்பந்தங்களையும் தள்ளிப்போட்டு - தள்ளிப்போட்டு மாப்பிள்ளையின் வயது கழுதை வயதான முப்பதையும் தாண்டுகிறது!

இவனுக்கு இரகசியமாக 'காதல்' ஏதும் இருக்குமோ? இவனது யூனி தோழர்கள் நால்வர் - இரண்டு ஆண்கள்- இரண்டு பெண்கள் - இவனைச் சுற்றியே இருப்பார்கள்.

அப்படியானால் காதல் எப்படி? அப்பிடி எதுவும் இருக்காது? அப்படியானால் கல்யாணப் பேச்சை எடுத்தால் அவன் ஏன் தள்ளிப் போகிறான்?

நேற்றைய தலைமுறை பெற்றோருக்கும் இன்றைய தலைமுறையினருக்கும் இடையில் நடக்கும் இந்த இழுபறி பற்றி ஒரு குறும் படம் பார்த்துப் பிரமித்துப் போனேன்.



படத்தின் பெயர் "ஒருவனுக்கு ஒருத்தி". சுமார் 18 நிமிடங்கள் மட்டுமே ஓடும் இந்த தமிழ் திரைப்படம் ஆங்கில உப எழுத்துக்களுடன் வெளியாகியிருக்கிறது.

இளைய தலைமுறையினர் மத்தியில் தமது அடையாளத்துக்கும் தமது பெற்றோரின் கலாச்சாரத்துக்கும் இடையில் நடக்கும் போராட்டம் படத்தில் பேசப்படுகிறது. பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட ARRANGED திருமணங்களை இந்தத் திரைப்படத்தின் கதாபாத்திரங்கள் கண்டனம் செய்வது சிலருக்கு ஏற்க முடியாததாக இருக்கலாம்.

ஆனால், அந்தப் பெண் கதாபாத்திரம் பேசும் வசனங்களில் கருத்தாழம் இருப்பது எனக்குத் தெரிந்தது.

"முன்பின் யார் என்றே தெரியாத ஒரு மனிதனை- அவனிடம் காசிருக்கு, FOREIGN வேலை இருக்கு- நல்ல குடும்பம்- நாள் போனா இதுவும் கிடைக்காது என்றெல்லாம் என் காதிலை பூச்சுத்தி அவனை என் தலையில் கணவனாகக் கட்டிவிடுற அளவுக்கு நான் ஒன்றும் முட்டாள் இல்லை! யாரோ ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அவனுக்கு பிடிச்சதையெல்லாம் செய்து கொண்டு, பிடிக்காதவற்றைச் சகித்துக் கொண்டு› கடைசியிலை எனக்கென்று ஒன்றுமே செய்யவில்லையே என்று யோசித்தபடி சாக முடியாது!"




- இது திரைப்படக் கதாநாயகியின் மனக்குமுறல். தன்னைப் பெண் பார்க்க வந்திருக்கும் பையனிடம் மனம் திறந்து பேசும் வார்த்தைகள் இவை.

படத்தின் நாயகனும் நாயகியும் நிச்சயிக்கப்பட்ட திருமணங்களை வெறுப்பவர்கள். 30 வயது நாயகனும் 25 வயது நாயகியும் பெற்றோர் வற்புறுத்தல் தாங்க முடியாமல் பெண் பார்க்க - நேரில் சந்தித்து பேச சம்மதிக்கிறார்கள்.

மொத்தம் 18 நிமிடங்கள் மட்டுமே ஓடும் இந்தப் படம் ஆரம்பித்து சுமார் 3 நிமிடங்களில் - இவர்கள் சந்திக்கும் காட்சி வருகிறது.

எஞ்சிய 15 நிமிடங்களும் இவர்கள் இருவரும் மட்டும்தான் இருக்கிறார்கள் - உரையாடுகிறார்கள். இளைஞன் உட்கார்ந்திருக்கிறான். யுவதி அறைக்குள் நுழையும்போது- "கதவை தாளிடாமல் போய் பேசு" என்று தாய் கீழே இருந்து சொல்கிறார். வாசலில் நின்று ஒரு கணம் சிந்தித்து விட்டு கதவைத் தாளிட்டாள். அறைக்குள் நுழையும் யுவதி காலி நாற்காலியில் அமராமல்- சுவரோடு சாய்ந்து கைகளைக் கட்டிக்கொண்டு நின்றவாறு பேசுகிறாள்.

இளைஞன் - அசட்டுச் சிரிப்புடன் உங்கள் FACE BOOK PROFILE பார்த்தேன் சினிமா- மியூசிக் பற்றிய உங்கள் தெரிவுகள் எனக்கும் பிடிச்சது நிறைய படங்கள் பார்ப்பீங்களோ?" என்று கேட்கிறான்.

யுவதி இடைமறித்து:- "எனக்கு இஷ்டமில்லை" என்கிறாள்.

இளைஞன் "உங்களுக்குமா?" என்று கேட்கிறான்.

அடுத்த கால் மணி நேரம் இருவரும் நடத்தும் உரையாடல்- எந்தவித ஒப்பனை/ மேக்கப் இல்லாமல்- பின்னணி இசை இல்லாமல்- இந்த இருவரும் நடத்தும் உரையாடல் என்னைப் புரட்டிப் போட்டது. உங்களில் பலரையும் அதிர்ச்சி அடைய வைக்கலாம்.

சமூகத்தில் ஒளித்து மறைத்து வைக்கப்படும் ஒரு விஷயம் பற்றி இருவரும் உரையாடுகிறார்கள் - பகிரங்கமாகப் பேசிக் கொள்கிறார்கள்!

இந்த இளம் குறும் படத் தயாரிப்பாளர்களுக்கு இருந்த புத்திக் கூர்மை- துணிச்சல் கண்டு வியப்படைந்தேன்.

வயதில் மூத்த திரைப்படத் தயாரிப்பாளர்கள் இதுபோன்ற பயனுள்ள கருத்துக்கள் கொண்ட படங்களை எடுக்கத் தயங்குவது ஏன்? "மார்க்கெட்டில் வரவேற்பு இருக்காது!" என்று ஒரு தயாரிப்பாளர் கூறலாம்.

எமது சமுதாயத்தின் மறுபக்கத்தை- யாராலும் மறைக்க முடியாத இந்த விஷயம் பற்றி தமிழ் வெள்ளித் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மட்டுமல்ல- சின்னத் திரை சீரியல் பட தயாரிப்பாளர்கள் கூட முற்றாக ஒதுக்கி வைத்து முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முற்படுகிறார்கள்.

தனக்குப் பிடிக்காத மருமகளைக் கொலை செய்ய சதி செய்யும் மாமியார் கதைகளை விட்டால் தொடர் நாடகங்களுக்கு கதைப் பஞ்சம்.

"ஒருவனுக்கு ஒருத்தி" என்ற இந்த குறும் படத்தின் முழுக் கதையையும் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. இளைஞன் தனது காரணங்களைக் குறிப்பிடும்போது நான் திகைப்படைந்தேன் - யுவதி பேசியபோது நான் அதிர்ச்சி அடைந்தேன்.

கதையை எடுத்து இயக்கிய விமல் சந்தியாகோவின் திறமையையும் துணிச்சலையும் நான் பாராட்டுகிறேன். படத்தை யூ டியூபில் பாருங்கள் நீங்களும் பாராட்டுவீர்கள். ●

wimalsockanathan@gmail.com

# Sky Wings Travel

25

*Your Travel Is Our Passion...*




## Talk to our Specialists in TAMIL

**Direct Flight From £ 523**

**SECURE YOUR BOOKING BY PAYING A £150 DEPOSIT**

| | |
|---|---|
| QATAR AIRWAYS القطرية | £489 |
| Emirates | £519 |
| KUWAIT AIRWAYS | £439 |

## WORLDWIDE SPECIALS

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | Fr £377 | MELBOURNE | Fr £588 |
| TRICHY | Fr £381 | AUCKLAND | Fr £420 |
| DELHI | Fr £369 | NEW YORK | Fr £380 |
| KUALA LUMPUR | Fr £441 | SYDNEY | Fr £591 |
| SINGAPORE | Fr £447 | TORONTO | Fr £344 |

**119 Tooting High Street, London, SW17 0SY**

IATA


**0208 672 9111**

ATOL PROTECTED 5766

Above fares are subject to availablity - T&Cs apply



# பிரிட்டன் புதிய பிரதமர் பொரிஸ் என்ன செய்யப் போகிறார்?



சக்தி சக்திதாசன்

இங்கிலாந்து அரசியல் வரலாற்றுப் புத்தகத்தில் 23.07.2019 ஒரு புதிய அத்தியாயம் ஆரம்பம். ஆம்! இங்கிலாந்தின் 77வது பிரதம மந்திரி, இங்கிலாந்து மகாராணியான இரண்டாவது எலிசபெத் மகாராணியின் ஆட்சியின் கீழ் 16வது பிரதம மந்திரியாக பொரிஸ் ஜான்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாணவனாக இங்கிலாந்துக்குள் அதுவும் பதின்ம வயதுகளின் உச்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்த எனக்கு இப்பிரதம மந்திரிகளின் தெரிவும், அதனால் எமது அன்றாட வாழ்க்கையில் ஏற்படப் போகும் மாறுதல்களும் அப்போது முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், காலங்கடந்து இன்று, அன்றைய அரச மாற்றங்கள் - அன்றைய வெளிநாட்டு மாணவனான எனது வாழ்வின் பல மாற்றங்களுக்குக் காரணமாக இருந்திருக்கின்றன என்று இப்போது நன்கு புரிகிறது. 1975ம் ஆண்டு நான் இங்கிலாந்துக்கு மாணவனாக புலம்பெயர்ந்த புதிதில் இங்கிலாந்து அன்றைய ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டுச் சேர்க்கையான பொதுச் சந்தை அதாவது கொமன் மார்க்கெட் எனும் அமைப்பில் இணைந்துகொள்வதா? இல்லையா எனும் சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற்று, அவ்வமைப்பில் ஐக்கிய இராச்சியம் இணைந்து கொண்டது

சரியாக 41 வருடங்களின் பின்னால் 2016இல் இன்றைய ஐரோப்பிய ஒன்றியத்தில் நிலைத்திருப்பதா? இல்லையா? எனும் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் நடவடிக்கைகளில் முழுமூச்சாக இறங்கியுள்ளது. இந்த 41 வருடங்களில் ஐக்கிய இராச்சியத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் அதனால் விளைந்த மக்களின் அன்றாட வாழ்க்கை முறைத் தாக்கங்களுமே பெரும்பான்மை மக்களின் இன்றைய மனநிலைக்குக் காரணம்.

இன்றைய ஐக்கிய இராச்சியத்தின் அரசியல் திருப்பம் புதிய பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பொரிஸ் ஜான்சன் அவர்களுக்கு ஒரு சவாலாகவே அமைந்துள்ளது. 67.53 மில்லியன் ஜனத்தொகையைக் கொண்ட ஐக்கிய இராச்சியத்தின் வெறும் 1,59,353 கன்சர்வேடிவ் கட்சியின் உறுப்பினர்களினால் மட்டுமே பொரிஸ் ஜான்சன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்தொகையில் 87.2 வீதமானோரே வக்களிப்பில் பங்களித்துள்ளனர். பொரிஸ் ஜான்சன் 96,153 வாக்குகளையும், அவருக்கெதிராகப் போட்டியிட்ட ஜெர்மி ஹண்ட் அவர்களுக்கு 46,656 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

கன்சர்வேடிவ் கட்சியின் அடுத்த தலைவர் தேர்தலின் முடிவுகள் 23.07.2019 மதியம் 12மணியளவில் கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் நிறைந்த கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. தனது வெற்றியின் அறிவித்தலைத் தொடர்ந்து பேசிய பொரிஸ் ஜான்சன், தனது பதவிக்கால மந்திரமாக மிகவும் முக்கியமான மூன்று விடயங்களைக் குறிப்பிட்டார். ப்ரெக்ஸிட்டை அக்டோபர் 31ம் திகதி நிறைவேற்றுவது, அபிப்பிராய பேதங்களினால் பிரிவுகளுக்குட்பட்ட தனது கட்சியையும், நாட்டு மக்களையும் ஒன்றிணைப்பது, ஜெர்மி கோபன் அவர்களின் தலைமையிலான லேபர் கட்சியை அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி கொள்வது என்பதுவே அவை. அதன் பின்னால் ஐக்கிய இராச்சியம் ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை அடைவது நிச்சயம் எனும் நம்பிக்கையை அனைவரும் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

2016 ஐரோப்பிய ஒன்றியத்தில் நிலைத்திருப்பதா? இல்லையா? எனும் சர்வஜன வாக்கெடுப்புக்காக பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் 46.5 மில்லியன். இதிலே இவ்வாக்கெடுப்பில் கலந்து கொண்டது 72.5 வீதம் மட்டுமே. வாக்கெடுப்பு முடிவில் வாக்களித்தவர்களில் 51.9 வீதமானோர் வெளியேற வேண்டும் என்றும், 48.1 வீதமானோர் வெளியேறக்கூடாது என்றும் வாக்களித்திருந்தனர்.

பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதே கடமை எனப் புறப்பட்ட தெரேசா மே இச்சவாலுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஒதுங்கிக் கொண்டுள்ளார். அவரின் பதவிக்காலத்தில் அவரின் தோட்டத்திலிருந்தே முட்களாக அவரைத் தைத்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது பொரிஸ் ஜான்சன் அவர்களுக்கு மலர்களாக வருடிக் கொடுக்க, தெரேசா மே பாதையில் மலர்களாக இருந்தவர்கள் இப்போது பொரிஸ் ஜான்சனுக்கு முட்களாக ஆரம்பித்திருக்கிறார்கள். இதுதான் அரசியல் நாடகம் என்பதோ?

எது என்னவாகினும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற வேண்டும் எனும் பெரும்பான்மை மக்களின் அபிலாஷையை அக்டோபர் 31ம் திகதி நிறைவேற்றியே தீருவேன் என்று சூளுரைத்திருக்கிறார் பொரிஸ். முறையானதோர் புரிந்துணர்வின் அடிப்படையிலமைந்த ஐரோப்பிய ஒன்றியத்துடனான உடன்படிக்கையொன்றுடன் தான் வெளியேற வேண்டும் என்பது பிரித்தானிய பாராளுமன்றத்தின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கை. இத்தகைய ஒரு நிலையில் அக்டோபர் 31ம் திகதிக்கு முன்னால் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒரு உடன்படிக்கையை எட்டாத பட்சத்தில் ஐக்கிய இராச்சியம் எதுவித உடன்படிக்கையும் இல்லாமல் வெளியேற வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்படும். ஆனால், இதற்கு பாராளுமன்றம் உடன்படாத நிலையில் பொரிஸ் ஜான்சன் அவர்களுக்கு இக்கட்டான நிலையேற்படும். அந்நிலையில் அவர் பாராளுமன்றத்தை அக்டோபர் 31ம் திகதியை உள்ளடக்கிய இரண்டு வாரங்களுக்கு தள்ளி வைத்து, ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய இராச்சியத்தை வெளியேடுக்க முயல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது பாராளுமன்ற ஜனநாயகத்துக்கே சாவுமணி அடித்து விடும் என்று பலமுனைகளில் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இக்காரணத்தினால் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் இத்திட்டத்துக்கு எதிரான சில அரச தரப்பு எம்.பிக்களின் ஆதரவுடன் எதிர்க்கட்சி இணைந்து கொண்டுவந்த தீர்மானத்தின் படி அக்டோபர் மாதத்தில் மற்றொரு பிரச்சனையான அயர்லாந்தின் சட்டசபை பற்றிய முன்னேற்றங்களை விளக்க இரண்டு வாரங்களுக்கொருமுறை பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும் எனும் தீர்மானம் பெரும்பான்மையான ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதமராகப் பதவியேற்கும் பொரிஸ் ஜான்சன் சிக்கல்களைத் தீர்த்து எவ்வாறு தனது கட்சியை மீண்டும் ஒற்றுமைப்படுத்தப் போகிறார் என்பது பலருக்கும் புரியாத புதிராகவே இருக்கிறது.

ஒரு வாதத்துக்காக அக்டோபர் 31ம் திகதி பொரிஸ் ஜான்சன் அவர்கள் பிரெக்ஸிட் எனும் இப்பிரச்சனைக்குத் தீர்வாக ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஐக்கிய இராச்சியத்தை வெளியேற்றிவிட்டார் என்றே வைத்துக்கொள்வோம். அதன் பிறகு நாட்டின் முன்னால் இருக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கும் வல்லமை பிரதமர் பொரிஸ் ஜான்சன் அவர்களுக்கு இருக்கிறதா? இது ஒரு முக்கியமாக அலசப்பட வேண்டிய ஒரு கேள்வி. பொரிஸ் ஜான்சனைப் பிரதமராக்கியது நாடளாவிய நிலையில் நடைபெற்ற ஒரு தேர்தலல்ல. ப்ரெக்ஸிட் எனும் ஒரு நிகழ்வையே தமது தாரக மந்திரமாகக் கொண்ட கன்சர்வேடிவ் எனும் கட்சியின் மூத்த உறுப்பினர்களினாலேயே என்பதுவே உண்மை.

அந்நிகழ்வைக் கடந்து தமது கட்சியை மட்டுமல்ல, பிளவுபட்டிருக்கும் நாட்டு மக்களை ஒன்றுபடுத்த வேண்டிய தார்மீகக் கடமை புதிய பிரதமரை நோக்கியிருக்கிறது. ப்ரெக்ஸிட்டைப் பொறுத்த வரையில் அதற்கு எதிராக சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களித்த 48.1 வீதமான வாக்களிப்பை கொடுத்த அம்மக்களை எவ்வாறு ஒரேநாடு எனும் கருத்துக்கு அமைவாக ஒன்றுபடுத்தப் போகிறோம் என்பதைக் குறித்து புதிய பிரதமருக்கோ, அவரைச் சார்ந்தவர்களுக்கோ என்ன கருத்து இருக்கிறது என்பதை இதுவரை உணர முடியாமல் இருக்கிறது.

அமெரிக்க நாட்டின் நலனை மட்டுமே முன்னிலைப் படுத்தும் வகையில் பல அதிரடியான நடவடிக்கைகளையும், பல உலக நடப்புகளுக்கு எதிரான, முரணான கருத்துக்களையும் விளைவுகளையும் கருத்திலெடுக்காது கூறி வருகிறார் அந்நாட்டின் சர்ச்சைக்குரிய ஜனாதிபதியான ட்ரம்ப் அவர்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியேற்றத்துக்குப் பின்பு ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்காவுடன் தாம் ஏற்படுத்தப் போகும் வர்த்தக உடன்படிக்கை மிகவும் முக்கியமாக இருக்கும் என்பதே ஐக்கிய இராச்சியத்தின் நிலைப்பாடு. இத்தகைய ஒரு இக்கட்டான சூழலில் உலக சமாதானத்தைக் குலைத்துவிடுமோ என்று பலர் அச்சப்படும் வகையில் நடந்துவரும் அதிபர் ட்ரம்ப் அவர்களுடன் புதிய பிரதமர் பொரிஸ் ஜான்சன் எவ்வகையில் செயலாற்றப் போகிறார்? என்பது உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டிய விடயமே. இங்கிலாந்தின் முன்னுதாரணமான பல முற்போக்குக் கொள்கைகளை தமது வர்த்தக நலன் கருதிப் புறந்தள்ளி அதிபர் ட்ரம்ப்பின் சர்ச்சையான நடவடிக்கைகளை சகித்துக் கொள்ளப் போகிறாரா பொரிஸ் ஜான்சன்?

பொரிஸ் ஜான்சன் அவர்களை ஆதரித்துப் பேசி வருகிறார் அதிபர் ட்ரம்ப். அவருடன் மிகவும் நெருக்கமான உறவுகளை பொரிஸ் ஜான்சன் ஏற்படுத்திக் கொள்ள முயன்றால் அது எவ்வகையில் ஐக்கிய இராச்சியத்துடனான மற்றைய பல முன்னணி நாடுகளின் உறவுகளைப் பாதிக்கப் போகிறது என்பதை அவதானிக்கிறார்கள் அரசியல் அவதானிகள். அதற்கப்பால் இந்த ப்ரெக்ஸிட் என்பது இங்கிலாந்தின் பொருளாதாரத்துக்கு அனுகூலமானது என்பதை நிரூபிப்பதற்கு சீனா, இந்தியா போன்ற நாடுகளுடனான உறவு மேன்மைப்படுத்தப்பட வேண்டும் எனும் எதிர்பார்ப்பு இருக்கிறது. இவ்வெதிர்பார்ப்பை புதிதாகப் பதவியேற்றுள்ள பொரிஸ் ஜான்சன் அவர்களுக்கு அமுல்படுத்தும் திறமை இருக்கிறதா என்பதும் கேள்வியே!

பலவிதமான கேள்விகளுக்கு பதிலை எமது புதிய பிரதமரின் அடுத்தடுத்த நடவடிக்கைகளின் மூலமாகவே நாம் அறிந்து கொள்ளலாம். அனைத்துக் கண்களும் மிகவும் தீர்க்கமாக புதிய பிரதமர் மீது குத்திட்டு நிக்கின்றன என்பதுவே உண்மை.

வழக்கமாக ஒரு புதிய பிரதமர் பதவிக்கு வந்ததும் அவருக்கான ஆதரவு நாட்டில் கூடுவதும், அவருக்கு அவரது கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் "தேனிலவுக் காலம்" என்று அழைக்கப்படும் ஒரு அனுசரணையான காலம் சிறிது காலத்துக்கு கிடைக்கும். ஆனால், இன்று தெரிவு செய்யப்பட்ட பொரிஸ் ஜான்சன் அவர்களுக்கோ இத்தகைய ஒரு அனுகூலமான காலத்துக்கான சாத்தியக்கூறு இல்லை என்பதே அரசியல் விமர்சகர்கள் கருத்து.

அனைத்து முயற்சிகளும் பலனளிக்காத பட்சத்தில் பொரிஸ் ஜான்சன் முன்னால் இருக்கக்கூடிய ஒரேயொரு தீர்வு பொதுத்தேர்தலே! இருப்பினும் இங்கிலாந்து அரசியல் சட்டத்தின்படி பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 5 வருடங்கள். இதற்கு முன்னால் அரசு கலைக்கப்பட வேண்டுமானால் அத்தீர்மானம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். இது எந்த அளவில் சாத்தியப்படும் என்பதும் ஒரு விடையறியா வினாவாகத்தான் உள்ளது.

வள்ளலாரின் கூற்றான பசித்திரு, தனித்திரு, விழித்திரு என்பதுவே பதவி என்பதன் அர்த்தம் என்பதனைப் பிரதமராக வந்த பின்தான் பொரிஸ் ஜான்சன் அவர்கள் புரிந்து கொள்ளப் போகிறாரோ? ●

# World Tour Store

## கொழும்பிற்கான சிறந்த பிரயாண ஏற்பாடு செய்ய எம்மை நாடுங்கள்

**15 YEARS**
**of trusted service**

# COLOMBO fr £459

## Worldwide Flight Deals

| | |
|---|---|
| DUBAI | fr £337 |
| TORONTO | fr £345 |
| CHENNAI | fr £376 |
| SYDNEY | fr £698 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Hyderabad | fr £432 | Delhi | fr £384 | Bangkok | fr £414 |
| Kochi | fr £433 | Goa | fr £443 | Singapore | fr £429 |
| Mumbai | fr £412 | Abu Dhabi | fr £316 | New York | fr £288 |

**FLY NOW PAY LATER OR BOOK WITH A DEPOSIT**

**HURRY ! CALL NOW 020 3970 4141**

BEST DEALS CHEAP FLIGHTS BEST DEALS

**Wembley**
Unit 3 A, Plaza Parade, 29-33
Ealing Road, Wembley, HA0 4YA.

**Lewisham**
111b, Loampit Vale,
Lewisham SE13 7TG

3550 ATOL PROTECTED

*Above fares & offers are subject to availability. T&C's Apply.

டாக்டர் எஸ்.நவரத்தினம்



# லண்டனில் எளிமையாக நடந்த அற்புதமான வயலின் சமர்ப்பணம்

கிருத்தி, கிருபா ரவி சகோதரிகளின் வயலின் இசை சமர்ப்பணம், ஈலிங் கனகதுர்க்கை சந்நிதான மண்டபத்தில் சமீபத்தில் சிறப்பாக நடைபெற்றது. கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவிகளான இவர்களின் நிகழ்வுக்கு மறைந்த இசை மேதை லால்குடி ஜெயராமன் புதல்வரான பிரபல வயலின் கலைஞர் ஜி.ஆர்.கிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து பெருமைப்படுத்தினார்.

ஈலிங் கனகதுர்க்கை மண்டபத்தில் அம்மனின் ஆசியுடன் இறையருள் பெற்ற நிறைவோடு சமர்ப்பணம் ஆரம்பமானது. இசைக்கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், ஆர்வலர்கள், அபிமானிகள் என மண்டபம் நிறைந்திருந்த சபையை வயலின் இசை மெதுவாக இதயங்களை தொடத் தொடங்கியது.

மேடையில் குரு கௌசல்யா அமர்ந்திருக்க, கிருத்தி-கிருபா சகோதரிகள், கற்ற வித்தையை சந்நிதானத்தில் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்கள். நிறைந்திருந்த சபையின் உன்னிப்பான கவனம் முழுக்க அந்த இசையை ரசித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். சபையினருக்கு வழங்கப்பட்டிருந்த சமர்ப்பணம் பற்றிய குறிப்புகள் அடங்கிய சிறிய பிரசுரம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. மனநோயாளர்களுக்கு உதவும் அர்பணிப்பை எடுத்துக்காட்டுவதாக முதல்பக்க குறிப்புடன் சமர்ப்பண நிகழ்ச்சி நிரலும் அச்சிடப்பட்டு, ரசிகர்களுக்கு வழிகாட்டியாக அமைந்திருந்தது.

வயலின் இசையை மீட்டுக்கொண்டிருந்த கிருத்தி-கிருபா வர்ணத்துக்குள் நுழைந்தபோது, சமர்ப்பணம் களை கட்டத்தொடங்கியது. லால்குடி ஜெயராமனின் ஆதிதாளத்திலான நீலாம்பரி ராகத்தில் அமைந்த வர்ணம் அது. குரு தன் குழந்தைகளை தாளம் போட்டு,



உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். இதைத்தொடர்ந்து ஆதிதாள விநாயகர் துதி இசைக்கப்பட்டது. இதன்போது பிள்ளைகள் மாறி மாறி அருமையான சங்கதிகளை இசைத்தனர். அடுத்து தியாகராஜ சுவாமிகள் அருளிய 'ஆடமொடி...' என்ற சுருகேசி ராக ஆதிதாள கீர்த்தனை நேர்த்தியாக இருந்தது. அடுத்து ஆவேரி ராக 'நகுமோ மா...' என்ற தியாகராஜ சுவாமிகள் கீர்த்தனையை அழகாகவும், விறுவிறுப்பாகவும் வாசித்தபோது கரகோஷம் பெற்றனர். குரு கௌசல்யா கர்நாடக சங்கீத ஞானம் நிறையப் பெற்றவர் என்பதை சேமா சாஸ்திரியின் கீர்த்தனையை தன் பிள்ளைகளுக்காக சேர்த்துக் கொண்டதிலிருந்து தெரியக்கூடியதாக இருந்தது. திருப்புகழை சிறப்பாக வாசித்தார்கள். லால்குடி ஜெயராமன் இயற்றிய 'தில்லானா'வை பிள்ளைகள் வாசித்து நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மகுடம் சூட்டி உற்சாகமான கரகோஷத்தைப் பெற்றார்கள். கிருத்தி-கிருபா ரவி சகோதரிகளின் சமர்ப்பணம் சிறப்புக்கு உயிர் கொடுத்து, வெற்றிக்கு உறுதுணையாக இருந்த பக்கவாத்தியக் கலைஞர்கள் பாராட்டுக்குரியவர்கள். மிருதங்கம்: அபிராம் சகாதேவன், கடம்: தனுஷன் சந்திரகுமார், தம்புரா: லக்ஷ்மி சத்தியலிங்கம்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிருஷ்ணன் பேசுகையில், பிரித்தானியாவில் பிறந்து வளர்ந்தாலும், சிறப்பான முறையில் கைதேர்ந்த கலைஞர்களைப் போல வயலின் வாசித்த சகோதரிகளை பாராட்டினார். "பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவர்களது குரு கௌசல்யாவிடம் கற்றுத் தேர்ச்சி பெற்ற ஆற்றலைப் பாராட்டுகிறேன். பெற்றோரின் ஆர்வமும், மற்றொரு காரணம், பிரித்தானியாவில் மிகச்சிறந்த ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் கற்று மூத்தவர் டாக்டர் ஆகி இருக்கிறார். அடுத்தவர் அதே பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டில் இருக்கிறார். கல்வித்துறையில் பட்டம் பெற்ற இச்சகோதரிகள் கலையிலும் சிறப்புப் பெற்று விளங்குகிறார்கள், வாழ்த்துக்கள்" என்று வயலின் மேதையின் புதல்வர் கிருஷ்ணன் கூறினார்.

ஆரவாரமில்லாமல், இறைவன் சந்நிதானத்தில் மிகச் சிறப்பாக எளிமையாக நடந்த அற்புதமான வயலின் சமர்ப்பணம் ஒன்றை கண்டு கழித்த உணர்வு எனக்கு ஏற்பட்டது. குரு கௌசல்யா தாயைப் போன்ற அன்போடு தமக்கு கற்றுக் கொடுத்த முறையை அவரது மாணவியே மனம் திறந்து கூறினார். குருவின் கற்றுக் கொடுத்த கடின உழைப்பு, பிள்ளைகளின் ஆற்றலை அற்புதமான நிகழ்வாக்கியது. சிறப்பான நிகழ்வை வழங்கிய கிருத்தி-கிருபா ரவி சகோதரிகளுக்கும், குரு கௌசல்யா சத்தியலிங்கத்துக்கும், பெற்றோர்களுக்கும் பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்! உரித்தாகுக. ●



மனம் திறந்து பேசுகிறார் ஹோமியோபதி வைத்திய நிபுணர் **ஆர்.தியாகராஜன்**



# மூட்டு வலி

# JOINT PAIN

மனித உடலின் கட்டமைப்பு இந்த நொடிவரை ஆராய்ந்து அறியப்பட்ட எந்த ஒரு விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் மட்டுப்படாத **பேரதிசயமாகும்.** நீங்களும், நானும் ஏன், நம் ஒவ்வொரு மனித உடலுமே இவ்வுலகில் முற்றிலும் உணர்ந்து அறியப்படாத - அதிசயமாகும். *(WONDERFUL HUMAN BODY).*

'கற்றது கை மண்ணளவு; கல்லாதது உலகளவு' என்ற வள்ளுவன் வாக்கு என்றென்றும் உண்மை, சாஸ்வதமானது. இந்தத் திருக்குறள் கருத்து மனித வாழ்க்கை *(HUMAN LIFE)*, மனித உடலமைப்பு *(HUMAN BODY)*, மனிதனின் மரணம் *(DEATH)* போன்றவை குறித்து நாம் அறிந்தவை மிக மிகச் சொற்பமே. நாம் அறிந்து கொள்ளவேண்டியது எண்ணற்றவை.



மனித உடலின் கட்டமைப்பின் ஆதாரம், எலும்புகள். *206* எலும்புகள் ஒருங்கிணைந்து மனித உடலின் அமைப்பினை *(SKELETON)* உருவாக்குகின்றன. எலும்புகள் ஒன்றோடு ஒன்று இணையும் இடம் மூட்டு *(JOINT)* எனப்படும். மூட்டுகளில் பெரியது, சிறியது *(LARGE AND SMALL JOINT)* அசைவது, அசையாதது *(MOVABLE AND FIXED JOINT)* என்று விதம் விதமாய் அமைந்துள்ளன. மூட்டுகள் அமையப் பெற்றதன் பிரதான காரணம், அசையும் செயல்திறனை *(JOINT TO CREATE MOVEMENTS)* உருவாக்குவதாகும். அசைவுகளை அடிப்படையாகக் கொண்டே - இருப்பது, நடப்பது, ஓடுவது, உட்கார்ந்திருப்பது, படுத்திருப்பது போன்ற எல்லாவிதமான மனித உடல் செயல்பாடுகளும் நடக்கின்றது. மூட்டுக்களின் கட்டமைப்பில் எலும்புகள் மட்டுமின்றி ஜவ்வு *(CARTILAGE)*, தசைநார் *(MUSCLE & TENDON)*, இரத்த குழாய்கள் *(BLOOD VESSELS)*, அசைவு-உணர்வு *(MOTOR-SENCERORY)*, நரம்புகள் *(NERVES)* என்பனவும் உள்ளடங்கியுள்ளது. இந்த முழு அமைப்புமே ஒருங்கிணைந்து, ஒத்துழைத்து செயலாற்றுவதாலேயே நம் உடலின் அசைவு இயக்கம் சீராகச் செயல்படுகின்றது. வலியற்ற உடல் இயக்கமும் *(BODY MOBILITY & GROWTH)*, வளர்ச்சியும் இயல்பாக நடைபெறுகின்றது. இந்த அமைப்பில் எந்த இடத்தில் குறை ஏற்பட்டாலும் அசையும்போது நோவு *(PAIN)* ஏற்படும். ஒரு வாகனத்தின் அமைப்பையும், இயக்கத்தையும் நம் உடலின் செயல்பாடுகளோடு ஒப்பிடலாம். ஒரு கார் சக்கரம், அச்சு, என்ஜின் போன்ற பல்வேறு பகுதிகளை உள்ளடக்கி உள்ளது. நான்கு டயர்களும் ஒரே மாதிரித் தேய்வதில்லை. காரணம், அவற்றின் தனிப்பட்ட பயன்பாடுகள் அப்படி. முன்னிரண்டு டயர்களும் ஒருவிதமாகவும், பின்புற டயர்களும் வேறு ஒருவிதமாகவும் தேய்மானம் அடைவது நமக்குத் தெரியும். முன்னிரண்டு டயர்களும் கூட விதம் விதமாய் தேயும். தேய்மானத்தை நிர்ணயிப்பது வீதியின் தரம் *(ROAD CONDITION)* மற்றும் காரின் உள்கட்டமைப்பு இவற்றுடன், சாரதியின் ஓட்டும் முறை ஆகிய மூன்று முக்கிய அம்சங்களாகும். விபத்தையும், விபரீதத்தையும் தவிர்க்க *MOT* நடைமுறை ஆண்டுதோறும் பின்பற்றப்படுகிறது. தாறுமாறான டயர்களின் தேய்மானத்தைச் சீரமைக்க *WHEEL ALINGMENT* செய்வது அவசியம். இதேபோன்று *HUMAN BODY ALINGMENT* செய்து கொண்டால் நம் உடல் மூட்டுக்களின் வலியற்ற, சீரான இயக்கம் வாழ்நாள் முழுவதும் சாத்தியப்படும்.




மூட்டு வலிக்கு எலும்பு பாதிப்பு மட்டுமே காரணமில்லை. இதைத் தவிர எண்ணற்ற காரணிகள் உள்ளன. ஆரோக்கியமான மூட்டு *(HEALTHY JOINT)* வலியின்றி அசையும். மூட்டு ஆரோக்கியம் சீர் கெட்டால், மூட்டு வலி ஏற்பட்டு முடங்கிவிடுவோம். மூட்டு வலிகளுக்கு விதவிதமா - பட்டைகள் *(BELT)* மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும். கழுத்துப் பகுதியில் உள்ள முள்ளந்தண்டில் உண்டாகும் வலிக்கு *(CERVICAL SPONDYLOSIS)* பரிந்துரைக்கப்படும் கழுத்துப்பட்டை *(NECK COLLOR BELT)* இடுப்பு எலும்பு மற்றும் தண்டுவடப் பகுதியில் உண்டாகும் வலிக்கு *(LUMBAR SPONDYLOSIS- BACK PAIN)* பரிந்துரைக்கப்படும்- இடுப்புப் பட்டை *(HIP BELT)* முழங்கால் மூட்டு வலி *(KNEE PAIN)* பரிந்துரைக்கப்படும் *KNEE CAP*, முழங்கை வலிக்கு பயன்படும் *ELBOW CAP*, மணிக்கட்டு வலியைக் கட்டுப்படுத்தும் *WRIST BAND*, இவை அனைத்தும் பலராலும் உபயோகப்படுத்தப்பட்டு, வலி நிவாரணம் பெற்று வருகிறார்கள். இது நமக்கு உணர்த்தும் உண்மை என்னவென்றால் மூட்டுகளில் உண்டாகும் வலிக்கு எலும்புகளை மட்டும் காரணம் கூறாமல், மூட்டுக்களை கட்டமைக்கும் தசைகளையும், தசை நார்களையும் *(MUSCLE AND TENDONS)* பலப்படுத்துவதன் மூலம் மூட்டுக்களின் அமைப்பை *(JOINT ALIGNMENT)* மறுசீரமைத்து மூட்டு வலிக்கு நிவாரணம் பெறலாம். சரியான *JOINT ALIGNMENT*, *80%* மூட்டு வலி பிரச்சனைக்கு சிறப்பான தீர்வாக அமையும்.

நமது உடல் விலை மதிப்பற்றது. உடலின் வடிவமைப்பும் செயல்திறனும் நவீன மருத்துவ விஞ்ஞான சிற்றறிவுக்கு எட்டாக்கனி, மிகச் சாதாரணமாக நமது உடல் குறைந்தபட்சம் நூறு வருடங்கள் உயிர் வாழ்ந்து செயல்படக்கூடிய திறன் வாய்ந்தது. நாம் ஆசையினாலும், அறியாமையினாலும் நம் உடலுக்கு செய்யும் இடையூறுகளே ஆயுள் குறைவதற்கும், வலி வேதனைகளுக்கும் முக்கிய காரணமாகும். மூட்டு வலியை புரிந்து கொள்ள உடல் அமைப்பை உற்று நோக்குவது மிகவும் அவசியம். பெண்களின் பிரச்சனை வேறு; ஆண்களின் பிரச்சனை வேறு. ஆணுக்கும் பெண்ணுக்கும் மூட்டு வலியும் வெவ்வேறு விதமானவை. நாற்பது வயதுக்குப் பிறகு பெண்களுக்கு வரும் மூட்டு வலிக்கு *HORMONES AND MENOPAUSE* போன்றவைகள் பிரதான காரணிகளாகும். ஆண்களுக்கு *HORMONE* களால் மூட்டு வருத்தம் வருவது அரிது. ஆண்களுக்கு உண்டாகும் மூட்டு வலிக்கு உடல் பருமன், தொந்தி, தொப்பை, வண்டி என்பவைகளே காரணிகள். வாழ்நாள் முழுவதும் உடலமைப்பு, உயரம், வயது போன்றவைக்கு ஏற்ப சீரான உடல் எடை பராமரிப்பு *(IDEAL BODY WEIGHT MAINTANANCE)* மூட்டு வருத்தத்தை அண்டவிடாது. வாழ்நாள் முழுவதும் நம் உடல் எடை குறியீட்டு எண்-*BMI-(BODY MASS INDEX)* சரியான அளவில் *BMI-25*க்குள் பராமரித்தல் நல்லது.

ஒவ்வொருவரின் உடலமைப்பும் வெவ்வேறானது. நிற்கும்போதும், நடக்கும்போதும், ஓடும்போதும் நம் உடல் எடை முழுவதும் இரண்டு கால்களின் ஊடாக, கால் பாத அமைப்பின் *(FOOT STRUCTURE)* அதிசய திறன் ஊடாக பூமிக்குள் சீராகச் செலுத்தப்பட்டு, சிரமமின்றி காற்றில் மிதப்பது போன்று உணர்கின்றோம். நம்முடைய பாத வடிவமைப்பு குதிக்கால் *(HEEL / ANKLE)* நடுப்பாதம் *(SOLE)*, கால் விரல்கள் ஆகியன ஒருங்கிணைந்து, *26* எலும்புகள் (*14* எலும்புகள் கால் விரல்களுக்கும் + *12 BONES IN THE SOLE AND ANKLE)* ஒருங்கிணைந்த கட்டமைப்பாகும்.



ஒரு நடனத்தை ரசிக்கும்போது - பலவிதமான வாத்தியக் கருவிகள் ஒன்றுகூடி இசை அமைத்து ரசித்துக் கொண்டிருக்கும்போது- ஒரு நொடியாவது நடனமாடுபவரின் பாதத்தில் அமைந்துள்ள *26* எலும்புகளின் ஒருங்கிணைந்த அசைவை *((HORMONIUS MOVEMENTS OF 26 FOOT BONES)* உணர்ந்து சிந்தித்தால், உடல் அமைப்பின் அதிசயம் புரியும். பாத அமைப்பில் மற்றொரு சிறப்பு அம்சம் *FOOT ARCH* என்பதாகும். இந்த வளைவான பாத அமைப்பே நிற்கும்போதும், நடக்கும்போதும் சராசரி *60* கிலோ பாரமுள்ள உடல் எடையைத் தாங்கி ஒரு பாரமற்ற, வலியற்ற, சுகமான உணர்வினை நமக்கு கொடையாகக் கொடுக்கின்றது. பிறவியிலேயே சிலருடைய பாதங்களின் *FOOT ARCH* அமைப்பிற்கு மாறாக *FLAT FOOT* அமையப்பெற்று தங்களது ஐம்பது, அறுபது கிலோ எடையை வலியுடன், வருத்தப்பட்டுப் பாரம் சுமக்க, நேரிடும். *FLAT FOOT* வலிக்கு சிறப்புக் காலணிகள் *(FLAT FOOT SHOES)* நிவாரணம் அளிக்கும்.

வலியை மறக்கடிக்கும் சக்திவாய்ந்த வலி நிவாரண மருந்துகளை *(POWERFUL PAIN KILLER)* தொடர்ந்து உபயோகிப்பதால், அதிகப்படியான உடல் பாதிப்பும், மிதமிஞ்சிய வலியுமே பலனாகக் கிடைக்கும். வலி நிவாரணிகளைத் தவிர்ப்பது நல்லது.

மூட்டுக்களின் அமைப்பை மறுசீரமைத்து *(JOINT ALINGMENT)* மூட்டுக்களின் ஆரோக்கியத்தை *(JOINT HEALTH)* கட்டி எழுப்பும் ஹோமியோபதி சிகிச்சை முறை எல்லாவிதமான மூட்டு வியாதிகளுக்கும், வலிக்கும் பக்க விளைவுகளற்ற சிறந்த தீர்வைக் கொடுக்கும். ●

**மேலதிக ஆலோசனைகளுக்கு**
**020 8144 1553**



மாதவிடாய் சீரமைப்பு சிகிச்சை
MRT
Menstrual Regulation Treatment
ESTRADIOL
OH
HO
ஒழுங்கற்ற மாதவிடாய்
Irregular Menstruation
ஹார்மோன் குறைபாடுகள்
Hormone Defects
அதீத ரத்தப்போக்கு
Over Bleeding
கர்ப்பமாவதில் சிக்கல்
Infertility
Normal ovary
Polycystic ovary
PCOD
சினைப்பை நீர் கட்டி
சிறப்பு சிகிச்சைகள்
பி.சி.ஓ.எஸ்.–ஆல் பாதிக்கப்பட்டு மன அழுத்தத்துக்குத் தள்ளப்படுபவர்கள்
34%
70%
பி.சி.ஓ.எஸ். பாதிப்பு ஏற்பட்டதே தெரியாமல் வாழும் பெண்கள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/HyperTension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Infertility)
டயபட்டிஸ் (Diabetes)
உடல் எடை அதிகரித்தல்
Obesity
முகப்பரு
Pimples
தலைவலி
Headache
சரியான தூக்கமின்மை
Sleepless
முடிகொட்டுதல்
Hair Fall
உயர்தர மருத்துவம் → பாதுகாப்பான மருந்துகள் → விரைவான சேவை
HOMOEO CARE
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
0044 7833341693
homoeocare
www.homoeocare.com
homoeocare@rediffmail.com

திருச்சிற்றம்பலம்.
ஸர்வ கல்யாண தாதாரம்
ஸர்வ வாபந்கர வாராம்
அபார கருணா மூர்த்திம்
ஆஞ்சநேயம் நமம்யகம்

# திருவருள் மிகு

# அருள்மிகு வேல்ஸ் தான்தோன்றி ஆஞ்சநேயப் பெருமானின் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் 2019

**10 Jersey Street, Port Talbot, SA13 1YR, Wales, UK. 01639417764, 07828108349**

புலம் பெயர் மண்ணில் புதுமைகள் மிக்கதோர் புண்ணியஸ்தலம் நலம் தரும் மாருதி நாளும் அருளும் நதிக்கரைத் திருத்தலம் ஜலம் சூழ் Wales Port Talbot பதியுறை அஞ்சினை வென்ற அஞ்சனை மைந்தனை அடி பணிந்து வலம் வந்து வணங்குவோர்க்கு வாழ்வில் புதிய பலம் வரும் ஏற்றம் வரும் நல்லதோர் மாற்றம் வரும். கனிவுடனே இவ்வுலக மக்களின் கண்ணீரைத் துடைக்கும் மாருதியின் சாந்நித்தியம் (தெய்வீக சக்தி வெளிப்பாடு) நிறைந்த மாபெரும் சந்நிதானத்தின் மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்.



**பேரன்புமிக்க ஆஞ்சநேயப்பெருமான் மெய்யடியார்களே!**

**நிகழும் மங்களகரமான விகாரி வருடம் ஆவணி 6ம் நாள் 21.08.2019 புதன் கிழமை கர்மாரம்பம் நடைபெற்று தொடர்ந்து கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, தூபிஸ்தாபனம், தீபஸ்தானம், இயந்திர ஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்ட பந்தனம் இடம்பெறும்.**

**22/08/2019 :** வியாழன் மாலை முதல் 23, 24/08/2019 மாலை 04:00 மணிவரை எண்ணெய்க் காப்பு சாற்றுதல் நடைபெறும்.

**25/08/2019 :** ஞாயிற்றுக்கிழமை ஆவணி 9ம் நாள் மிருகசீரிட நட்சத்திரமும் தசமி திதியும் மிதுன ராசியும் கூடிய காலை 09:33 மணி தொடக்கம் 11:18 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம்வல்ல ஆஞ்சநேயப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது.

| | | |
|---|---|---|
| பிரதிஷ்டா பிரதம குரு | : | சிவநேசச் செல்வர், பசுபதி உபாசகர், அருட்கலாநிதி சிவஸ்ரீ அமிர்த சிவலோகநாதக் குருக்கள் அவர்கள். |
| கௌரவக் குருமார்கள் | : | திரு. சந்திரன் குருக்கள் அவர்கள் – இலண்டன்<br>திரு.ராம் குருக்கள் அவர்கள் – இலண்டன்<br>திரு.தியாகராசா சந்திரசேகர குருக்கள் அவர்கள் – சுவிஸ் |
| கௌரவ ஐயா | : | திரு.ஸ்ரீ ஐயா அவர்கள் – இலண்டன் |
| ஆலய கட்டடக்கலை விற்பன்னர் | : | திரு.சரவணமுத்து ஜெயகாந்தன் |
| ஆலய குரு | : | சிவயோகி, ஜெயசற்குரு, ஆஞ்சநேய மைந்தன்,<br>உலக சைவத்திருச்சபை இலண்டன்<br>கிளைத் தலைவர் திரு.பரமசிவராசா சுவாமிகள். |

## சிறப்பு நிகழ்ச்சிகள்

09:00 – நாதஸ்வரக் கச்சேரி – யாழ்ப்பாணம் நாதஸ்வர கான சிரோன்மணி M.P. பத்மநாதன் குழுவினர் இலண்டன்.
10:00 – சுவிஸ் பேர்ண் மாநில பூரணா ஆச்சிரம பரவசயோக நிலைய நாராயண தேவஸ்தான ஸ்ரீபூரணா சுவாமிகள் குழுவினரின் பஜனை.
11:00 – பாம்பு நடனம் – செல்வி. சௌமியா சுபாஸ்கரன்.
ஆனந்த கணபதி நடனப் பாடல் – செல்வி.தணிகா பேரின்பமூர்த்தி.
11:30 – குஜராத் மக்களின் பஜனையும், நாட்டியமும்.

**கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேக பூசைகள் இடம்பெறும். தொடர்ச்சியாக அலங்காரத் திருவிழாவும் நடைபெற உள்ளது. பெருந்திரளாக வருகை தந்து வரப்பிரசாதி, சமயசஞ்சீவி, அஞ்சனை மைந்தனின் அருளாசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

குறிப்பு : இவ்விசேட தினங்களில் பூசைக்கும், அன்னதானத்துக்கும் தேவையான நிதியுதவியையும் பொருளுதவிகளையும் வழங்கி உதவுமாறு பக்தர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் அன்றைய தினம் பிரயாண ஒழுங்குகளைப்பெற விரும்பும் அடியவர்கள் திரு.செந்தூரன் என்பவருடன் தொடர்பு கொள்ளவும். 07530596101 ஆலயம் M4 நெடுஞ்சாலையில் 40 வது Exit இலிருந்து 10 நிமிட நேர பயணத்தூரத்தில் அமைந்துள்ளது.

**கும்பாபிஷேக குழுவினர்,**
**ஆலய நிர்வாகத்தினர்.**

உ

கற்பகபதி

அற்புத அருள்புரி கற்பக கணபதி
பொற்பதம் போற்றின் நற்பலன் பெறலாம்.

# ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம், வோல்தம்ஸ்ரோ

2-4 Bedford Road, Walthamstow E17 4PX, Tel: 020 8527 3819 / Reg.Charity No:1092252

## 18வது ஆண்டு மகோற்சவம்-2019









**கொடியேற்றம்**
12.08.2019 - 11.00 a.m.

**தேர்த்திருவிழா**
25.08.2019 - 11.00 a.m.

**தீர்த்த திருவிழா**
26.08.2019 - 11.00 a.m.

**திருக்கல்யாணம்**
27.08.2019 - 7.00p.m.

**திருவிழாக்கால இலவச வாகனத் தரிப்பிடம்**

கொடியேற்றம் (12.08.2019), தேர்த்திருவிழா (25.08.2019) ஆகிய இரண்டு நாட்களிலும் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை அனைத்து CPZ வலயத்திலும் LPW, WA, HS, LPE, LPN (41 வீதிகள்) வாகனம் தரிக்கலாம்.

12.08.2019 முதல் 27.08.2019 வரை கீழ்க்காணும் வீதிகளில் காலை 8.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை இலவசமாக வாகனம் தரிக்கலாம். - LPW (Bromley, Bedford and Dudley Road.)

## சதுர்த்தி கலாரூப விநாயகர் நிமஜ்ஜனப் பெருவிழா

(திருமஞ்சனத் தீர்த்தத் திருவிழா)

**15.09.2019 ஞாயிற்றுக்கிழமை**


காலை 9.00 மணி ஆலயத்திலிருந்து புறப்பாடு

**CLACTON ON SEA**

West Road, Clacton, Essex CO15 1SE (Between 11.00 am to 2.00 pm)

கடற்கரையில் 11.00 மணி முதல் நிமஜ்ஜன வழிபாடு

தீபாராதனை; அர்ச்சனை நிகழ்வுகள் இடம்பெற்று நிமஜ்ஜனமும் தொடர்ந்து மகா பிரசாதம்.





டாக்டர். என்.ஜெகநாதன்



# தர்மம் தலை (முறை) காக்கும்

தர்மம் என்பதை கொடை (கொடுத்தல்), ஈகை என பலர் அர்த்தம் கொள்வார்கள். அறம், நீதி, நேர்மை, வாய்மை என்பதே அதன் பொருளானது. அறம் செய்ய விரும்பு என்பது முன்னோர் வாக்கு. அறம் காப்பதே நம் விருப்பத்திற்கு வேண்டியது (*Trust*).

தர்மம் தலைகாக்கும், தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்பார்கள்- 'தலை' எனக்குறிப்பது உயிர்காக்கப்படுவதை. புண்ணியம் என தூய்மைக்கு / நல்வினைக்கு உரியவை அடங்கும்.

உச்சி நிலையிலுள்ளது தலை என்பதாக தலைமை, தலைவன் என்ற சொற்கள் அமைகின்றன. இத்தகுதி, அதிகாரத்திற்குரியவன் நேர்மையானவனாக இருந்தால்தான் செங்கோல் ஆட்சிக்கு இடமுண்டு. இல்லையேல் சமூகம் / நாடு உருப்பட இடமில்லை.

புத்தக முன் அட்டை (*Cover*)யை பார்த்து அதை மதிப்பிடக்கூடாது என்பதைப் போல் தலைப்பை முன்வைத்து உரையில் அடங்குவதை எதிர்ப்பார்க்கக் கூடாது எனலாம். அல்லது ஒரு நாடகம், கச்சேரி அமையும் என்பதைப் பற்றியும் குறிப்பிடலாம். ஏதோ எழுதி / பேசிவிட்டேன், கச்சேரி நடத்திவிட்டேன்; பணம் வசூலானது என பெருமைப்படலாம். அவை முறையாக, நேர்மையாக அமையாத மட்டில் தலைப்பிற்கு மதிப்பு ஏது?

எல்லோருக்கும் முதல்வன் (தலைவன்) ஆக கர்த்தன் / செய்வோன் (*Doer*), இறைவன் ஒருவன் உள்ளான். அறம் செய்வது அவனது அருள் பெற, எமது 'கர்மக் கணக்கு' சரி செய்யப்பட என சமயங்கள் உபதேசித்தன.

உயிர்கள் யாவும் தத்தமது தலைமுறை தழைக்கவென பிரயத்தனப்படுகின்றன. அதற்கென இடம், பொருள், அதிகாரம் எனப் போட்டியிடும்போது தர்மம் என்பதற்கு இடமிருக்குமா என்ற கேள்வி எழாமலில்லை. அதர்மம் ஓங்கிவிடாதிருக்க வினைப்பயன் என்றவாறு 'கர்மக்கணக்கு' எல்லா உயிர்களுக்குமாக உள்ளது என ஏற்க வேண்டியதே.

மனிதனது சிருஷ்டிக்கு கடவுள் காரணமாக உள்ளாரோ / இல்லையோ, கடவுள் என்பவனை மனிதன் 'சிருஷ்டிக்கு' வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகிறான் என ஒரு தத்துவஞானி குறிப்பிட்டு உள்ளார்.

நன்மை பயக்குமான எந்த ஒரு காரியத்தை முன்னிட்டும் நாம் வாய்மை தவறுவது ஏற்கத்தகுந்ததே என்பதை மறுக்க முடியுமா? மகாபாரதம் இவ்வாறான சம்பவங்களை உள்ளடக்கியுள்ளதை நாம் அறிவோம். கொடையில் உயர்ந்த கர்ணன், அதன் மூலம் தான் பெற்ற நல்வினைகளை தாரை வார்த்து கொடுத்த பின்னரே அவனது ஆன்மா உடலை விட்டு நீங்கியதாகவும் இக்கதை கூறுகிறது.

மகாபாரதம் வரலாற்றில் நிகழ்ந்ததா / இல்லையா என்பது வீண்வாதம். அது சொல்லும் கருத்துக்கள் எமது நன்மைக்காக வேண்டியதே முக்கியம். எமது தர்மம் பிரதிபலனை முன்னிட்டு நாம் செய்ய விரும்புவதாக அமையக்கூடாதது.

ஏதோ ஒரு காலத்தில் (யுகம்) பூலோக மக்கள் யாவரும் நீதி, நேர்மையுடன் வாழ்ந்தவர்கள் என்றும், அபூர்வ சக்தியுடையவர்களானவர்களாக அமைந்தார்கள் என்றும், தற்போதைய கலியுகம் அவர்களை மாற்றிவிட்டது எனவும் சிலரது கருத்து. இதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

இருள் இல்லாவிடின் ஒளியின் விசேஷம், முக்கியத்துவம் அறிவோமா? அதர்மம் நிலவுவதால்தான் தர்மம் என்பதும் விசேஷம் / முக்கியமாகிறது. அதர்மம் அறவே இல்லாத 'தர்மபுரி' இருள் இல்லாத ஒளிப்பிரதேசமாக அல்லவோ அமைய வேண்டும்.

சொர்க்கம், நகரம் என தனி இடப்பிரிவினை ஒளி / இருள் மட்டுமேயுள்ளதான தனி இடமாக கருதப்பட வேண்டியதே. சொர்க்கத்தில் தீயவர்களும் நரகத்தில் நல்லவர்களும் என்றவாறானதான பூலோகம் அமைந்துவிட்டிருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. சொர்க்க இராச்சியம் (*Kingdom of Heaven*) என்பது எமது மனதில் அமைக்கப்பட வேண்டியதானது என்றே நாம் கருதலாம்.

பூலோக வாழ்வு எமது கர்மவினைக்கேற்ப நன்மை, தீமைகளுடன் அமையும் என்ற கருத்தை ஏற்பதும் கேள்விக்குரியதே. செல்வச்சிறப்புடன் வாழும் பெரும்பாலானோர் அதை குறுக்குவழிகளில், அதர்ம முறைகளால்தான் பெற்றும் நிலைநாட்டவும் செய்கிறார்கள்.

தர்மம் கடைப்பிடிப்பவர்கள் வாழ்வில் இக்கட்டுகளை சந்திக்க நேர்கிறது. உண்மையை உஷார்படுத்துவோர் (*Whistle Blowers*) உத்தியோகம் இழப்பதாகவும் பதவி உயர்வு பெறாமலும் போய் விடுவது தெரிந்ததே.

வாய்மை வெல்லும், சத்தியமே ஜெயம் என்று சொல்லப்படுவது ஏன்? சத்தியம் என்பது 100% பரிசுத்தமானது. 1% மாசு கொண்டாலும் அது தூய்மை இழந்துவிடுகிறது. தூய்மை என்பதில் கலப்படமில்லை. அதற்குத் தோல்வி என அமைவதில்லை. தூய்மையற்றதாக 1-99% இழப்பு (தோல்வி) அடையலாம். 100% தூய்மையற்றதாயின் அது வேறொன்று (பொருள் / நிலை) ஆகிவிடும்.

தூய்மை காண்பது சிரமம். அதற்கு துலக்க (*POLISH*) அல்லது வெளுக்க (*WASH*) வேண்டும். சத்திய சோதனை நாம் வாழ்வில் சந்திக்க நேர்வதும் தூய்மைக்கான பரீட்சைகளே அவை. இறைவனின் திருவிளையாடலே என்பது ஆஸ்திகர்கள் கருத்து.

போட்டி, களைப்பு அற்ற விளையாட்டில் சுவாரசியம் இல்லை. வாழ்க்கை விதிவிலக்கா என்ன? விளையாடுவது நாமே. நேர்மை தவறும்போது இரண்டுமே இரகசியம், ரகளை அடங்கியதாகிவிடும்.

ஆன்மா, கர்மம், கடவுள் என்பன எமது நம்பிக்கைகளாக உள்ளனவே. உடல் உருவம் பெறுவதற்கு பஞ்சபூதங்களாக கருதப்படும் விண், மண், வாயு, அனல், புனல் என்பன ஏதோவிதமாக பங்கேற்பன என்பதில் சந்தேகமில்லை.

கட்டிடம் முறையாக நிர்மாணிக்கப்பட அதற்கென ஒரு வரைபடம் அவசியமாகிறது. கருவிகள், பொருட்கள் பெருமளவில் ஆக்கப்படுவதற்கு அச்சு வார்ப்பு (*Mould*) தேவை. எமது உடல் உருவாக்கப்பட மரபியல் வழிக்கோவை (*Genetic Chain*) உள்ளது என்பது நிச்சயமே. ஒரு இனத்தின் தலைமுறை இதில் தங்கிவிடுவதே.

கலப்பு இன (*Hybrid*) தோற்றுதலுக்கும் மரபியல் வழிக்கோவை இடமளிப்பதால்தான் பரிணாமம் (*Evolution*) இயற்கையில் சாத்தியமாகிறது. இந்நிகழ்வாக தரம் உயர்ந்தவையின் தலைமுறை தொடர்ந்தும், தரம் குறைந்தவையின் தலைமுறை அழிந்தும் (*Extinct*) விடுவதாக இயற்கை அமைகிறது.

பொதுவாகக் கூறின் தலைமுறையை நேர்த்தியாக தோற்றுவிக்க வேண்டியதாக உள்ளது நகல்களாக இல்லாது அசலாக அமைய வேண்டும். மனித இனத்தின் தலைமுறையில் இதை அடைவதற்கான தேவையாக தர்மம் அமைகிறது. வாழ்வில் நாம் புரியக்கூடிய உயர்ந்த சேவை இதுவே ஆகும்.

பலதலைமுறைகளுக்கென பணம், பொருள் சேர்த்து விடுவதில் மட்டும் சிலர் பாடுபடுவார்கள். வாரிசுகளுக்குப் பெரும் பரிசாக இது படலாம். ஒரு தலைமுறையில் அவை சீரழிந்தும் விடலாம். அவர்களது மனஅமைதிக்கு இது உத்தரவாதம் அல்ல.

ஈன்றவர்களின் கடமை பிள்ளைகளை சான்றோன் ஆக்குவதே. அது கல்விச் சான்றிதழ்கள் பெற மட்டுமல்ல; பெருந்தகையுடையோன் ஆக்குவதுமாகும். அத்தகைமையுடையவன் எத்தகைய சந்தர்ப்ப சூழலிலும் மனஅமைதி காண்பவனாகிறான். ஈன்ற பொழுதிலும் மேலாக தாய் பூரிப்படைய மகன் சான்றோன் ஆக வேண்டும் என திருக்குறள் கூறுகிறது. அதுவே மகன் தந்தைக்கு ஆற்றும் பேருதவி என்றும் அதில் உள்ளது.

அதைவிடுத்து தன்னைவிட மகன் பெரிய பதவி வகிக்கிறான், அதிக ஊதியம் பெறுகிறான் என்று மட்டும் தந்தை உவகை கொள்வது மடமையே. பணமும் பதவியும் இழக்கப்படலாம். வேறு நிகராக பெறக்கூடியனவே. பெருந்தன்மை நிகரற்றது. அது இழக்கப்பட்டால் சரி செய்ய முடியாததாகிவிடும்.

நேர்மையாக வாழ்ந்து வசதியாக பொருள், பதவி எமக்கு அமையவில்லை என சிலர் சலிப்பு அடையலாம். பலரது வரவேற்பு இல்லாமலும் போகலாம். சிந்தித்தால் சிரிப்பு வரவேண்டியதைவிட்டு மனம் நொந்து அழுவது ஏன்?

தற்போதைய சூழலில் சீதனம் என்பது தர்மத்தின் உதாசீனம் ஆகிறது. வழக்குகளில் நிதி, நீதியை வஞ்சித்தும் விடலாம். தலைமுறையாக அமைந்து விடுவதை நாம் வஞ்சிக்க முடியுமா?

'விதைக்கப்படுவதே பயிராக ஆகமுடியும்'.●

# மனிதன்



செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை குடியமர்த்தும் முயற்சியின் முதல் கட்டமாக– அமெரிக்க விஞ்ஞானிகள் அனுப்பிய அந்த நவீன விமானம் இருபது மனிதர்களுடன் செவ்வாய் கிரகத்தை நோக்கிப் பறந்து கொண்டிருக்கிறது. விஞ்ஞானிகளின் இந்த சாதனையை– மனித இனத்தின் அறிவு வளர்ச்சியை– புகழாத பத்திரிகை இல்லை–விபரிக்காத தொலை தொடர்பு சாதனங்கள் இல்லை.

ஊரின் ஒதுக்குப்புறமாக உள்ள மயானத்தில்– அடர்ந்து பரந்திருந்த மரமொன்றில் அமர்ந்திருந்த ஒரு குட்டிப் பிசாசு–நானும் மனிதர்களின் அறிவு வளர்ச்சியையிட்டு பெருமைப்படுவதாக தன் நண்பர்களுக்கு கூறியது. கூட்டத்தில் இருந்து இதைக் கேட்ட கிழ பிசாசு ஒன்று நளினமாக கூறியது:

வயதில் சிறிய உனக்கு மனிதர்களைப் பற்றி– அவர்களின் சரித்திரம் பற்றி– எதுவும் விபரமாக தெரியாது.

இந்த மனிதன் என்னும் ஜன்மம் பூமியில் தோன்று முன்பு– ஐந்தறிவு படைத்த விலங்குகள் மட்டுமே பூமியில் வாழ்ந்த காலத்தில்– காற்று– நிலம்– நீர்– ஆகாயம்– எல்லாமே சுத்தமாக– சுகாதாரமாக இருந்தன. எல்லா உயிரினங்களையும் தாங்கிக் கொண்டு– அவற்றைப் பராமரித்துக்கொண்டு– அழகாக இயங்கியது இந்த பூமி.

மனிதன் என்ற இந்த நாய் தோன்றிய அன்று ஆரம்பமாகியது பூமியில் துன்பங்கள்.

அழகாக இருந்த நிலத்தை– இது அமெரிக்கா– இது ஆபிரிக்கா– இது ஆசியா– என்று எல்லைகள் போட்டுப் பிரித்து– காட்டை வெட்டி– நதிகளை அணை போட்டு– திசை திருப்பி– விலங்குகளை– தாவரங்களை– பறவைகளை– கொன்று– குவித்து– பருவ காலங்களை மாற வைத்து– சூழலை– சுற்றாடலை–மாற்றியவர்கள் இந்த மனிதர்கள்.

வறட்சியால்– வெள்ளத்தால்– புயலால்– இங்கு நேர்ந்த துன்பங்கள்– துயரங்கள் எல்லாவற்றிற்கும் இந்த நாய்களே காரணம்.

நிலத்தை குடைந்து அணு ஆயுதங்களை பதுக்கி வைத்து– அதே ஆயுதங்களைக் கொண்டு நிலத்தை பிழந்து– நிலத்தை– நீரை– வாயுவை– ஆகாயத்தை அசுத்தமாக்கியவர்கள் இந்த மனிதர்கள்.

இன்று காற்றில் விஷம், நிலத்தில் விஷம், நீரில் விஷம், எங்கும் எதிலும் விஷம். சொர்க்கபுரியாக இருந்த பூமியை வாழ முடியாத நரகமாக்கியவர்கள் இந்த பேராசை பிடித்தவர்கள்.

இவ்வளவற்றையும் செய்த பின்னும்கூட இவர்கள் இங்கு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கின்றார்களா என்றால் அது தான் இல்லை. இயற்கை உருவாக்கிய உயிரினங்களிலேயே சந்தோஷம் இல்லாத ஒரே ஒரு உயிரினம் மனிதன் ஒருவன் தான்.

இந்த லட்சணத்தில் இவர்கள் செவ்வாய் கிரகம் சென்றால் என்ன– புதனுக்குப் போனாலென்ன? எங்கும் எப்போதும் அதே செக்கு மாட்டு வாழ்க்கை தானே இவர்களுக்கு!

# திணிப்பு

அந்தப் பிரபல பல்கலைக்கழகம் இன்று அறுநூறு மாணவர்களுக்கு பட்டமளித்துக் கௌரவித்திருக்கிறது. பட்டம் பெற்ற நண்பர்கள் குழு ஒன்று அதை வெகு உற்சாகமாக ஹோட்டல் ஒன்றில் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. நேரம் போகிறது–போதை ஏறுகிறது– ஞானம் பிறக்கிறது. திடீரென ஒருவன் தனது நண்பர்களுக்கு கூறுகிறான்:

நாம் பெருமைப்படும் விதத்தில்– கொண்டாடும் வகையில்–இன்று எதுவுமே உருப்படியாக நடந்து விடவில்லை. நன்றாகச் சிந்தித்துப் பார்த்தால் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் உருவாக்கிய– பட்டதாரிகள் எனப்படும் கூலிக்கு மாரடிக்கும் ஒரு கும்பல் நாம்!

ஒரு மாணவன் திறமைசாலியெனில்– அவனுடைய பரீட்சை முடிவுகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது நமது சமூகக் கணிப்பு. அப்படியில்லாவிடில் அவன் ஒரு முட்டாள்! நான் ஒரு திறமைசாலி– முட்டாள் அல்ல– என்பதை சமூகத்திற்கு நிரூபிக்க வேண்டுமென்றால் எனது பரீட்சை முடிவுகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது ஒரு மாணவனின் கணிப்பு. எங்கள் பிள்ளையை நாங்கள் சரியாகத் தான் வளர்த்திருக்கிறோம்– அவன் வெகு திறமைசாலி– என்று சமூகத்திற்கு காட்ட வேண்டுமென்றால் அவனது பரீட்சை முடிவுகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பது பெற்றோர்களின் கணிப்பு. அப்படியில்லாவிடில் அவர்கள் பிள்ளைகளைச் சரியாக வளர்க்கத் தெரியாத பெற்றோர்கள்!



பரீட்சை முடிவு இது என்றால் இவன் மருத்துவம் படிக்க வேண்டும்– அது என்றால் அவன் விவசாயம் படிக்க வேண்டும்– இது படித்தால் இவனுக்கு இந்த அந்தஸ்து– அது படித்தால் அவனுக்கு அந்த அந்தஸ்து– இது ஒரு சமூக– பொருளாதார கணிப்பு.

இந்த மனித உடல் இயற்கையின் ஒரு அற்புத பரிணாமம். இதன் பரிமாணங்கள் பற்றி– இதன் உறுப்புகள் பற்றி– அவை தொழிற்படும் முறை பற்றி– நான் மேலும் மேலும் அறிய வேண்டும் என்ற ஆவலில் எந்த மாணவனும் ஆரம்பத்தில் மருத்துவக் கல்லூரிக்குச் செல்லுவதில்லை!

கடுகளவேயுள்ள விதை– கன்றாகி– செடியாகி– வானளாவும் மரமாகி– பூத்து– காய்த்து– பழுத்து– மீண்டும் கடுகளவேயுள்ள விதையாகி– கன்றாகி– மீண்டும்– மீண்டும்! தாவர உலகத்தின் இந்த அதிசயத்தை தெரிந்து கொள்ள எந்த மாணவனும் ஆரம்பத்தில் விவசாயக் கல்லூரிக்குச் செல்வதில்லை!

அணுவுக்கு அப்பால்– அந்த அப்பாலுக்கும் அப்பால்– அங்கு எதுவுமே இல்லை. வெறும் சூனியம் மட்டுமே! இந்த எதுவும் இல்லாததிலிருந்து– அந்தச் சூனியத்திலிருந்து– இங்கு நாம் காணும் எல்லாம் எப்படி உருவாகிறது என்ற விந்தையில் மனத்தை பறிகொடுத்து எந்த மாணவனும் ஆரம்பத்தில் பொறியியல் கல்லூரிக்குச் செல்வதில்லை.

நம்மைச் சுற்றியுள்ள சமூகம் என்ற நாலு முட்டாள்கள் மேய்க்கும் ஒரு மந்தை நாம்.

இங்கு மேய்ப்பவர்களுக்கும் மூளை கிடையாது– மேய்க்கப்படுபவைகளுக்கும் மூளை கிடையாது. யாரோ போட்ட விதிகள்– எதற்காகவோ கீறிய வட்டங்கள் இன்னும் மாற்றப்படாமல் தொடர்கின்றன.

இந்த லட்சணத்தில் இங்கு கொண்டாட என்ன தான் இருக்கிறது?

பல்கலைக்கழகம்– கூலிக்கு மாரடிப்பவர்களை உருவாக்கும் ஒரு தொழிற்சாலை!

# சராசரி

நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்த வெகு நாளைய நண்பர்களான சுகந்தனும் பார்த்திபனும் ஒன்றாக உணவருந்துவதற்காக ஓட்டல் ஒன்றில் அமர்ந்திருக்கிறார்கள். கொழுப்பு சத்து அதிகமில்லாத– கலோரிகள் குறைவாகவுள்ள–உணவு வகைகளை வெகு கவனமாக தெரிந்து– அவற்றை சர்வரிடம் கேட்கிறான் சுகந்தன். பார்த்திபனோ எதைப் பற்றியும் சிந்திக்காமல் நெய்யில் பொரித்த– கலோரிகள் அதிகமுள்ள– உணவு வகைகளை தனக்காக தெரிவு செய்கிறான். பார்த்திபனின் இந்தச் செயலால் அதிர்ச்சியடைந்த சுகந்தன் நண்பனிடம் கேட்கிறான்:

பார்த்திபா! நீ எந்த கிரகத்தில் இருக்கிறாய்? கொழுப்புச் சத்தை அதிகமாக உண்ணும்– தேவைக்கதிகமான கலோரிகள் உள்ளெடுக்கும்– மனிதர்களுக்கு என்ன நடக்கிறது என்று மருத்துவ விஞ்ஞானம் காட்டும் புள்ளிவிபரங்களை நீ படிக்கவில்லையா?

பார்த்திபன் சிரிக்கிறான். தனது பாக்கட்டிலிருந்து சிகரட் ஒன்றை எடுத்து– சுகந்தன் முகம் சுழிக்க– அதை பற்றி பின் நண்பனிடம் கூறுகிறான்:

சுகந்தா! பழநிக்கே பஞ்சாமிர்தம் விற்க முயற்சி செய்கிறாய் நீ. புள்ளிவிபர விஞ்ஞானத்தில் நான் டாக்டர் பட்டம் பெற்றவன் என்பதை மறந்து விடாதே. நான் சொல்வதை நன்றாக கேட்டுக் கொள். இந்த புள்ளிவிபரம் என்பது ஒரு பம்மாத்து– உன்னைப் போன்ற எத்தனையோ மனிதர்களுக்கு இந்த விஞ்ஞானிகள் காட்டும் ஒரு வகை குறளி வித்தை. உதாரணத்திற்கு ஒன்று கூறுகிறேன். இந்த புள்ளிவிபர விஞ்ஞானத்தில் பாவிக்கப்படும் ஒரு முக்கியமான சொல் சராசரி. எந்தவிதமான அர்த்தமும் இல்லாத– வெறும் ஏமாற்று வித்தை– இந்த சொல் என்பது உனக்கு தெரியாது.



எப்பொழுதாவது நீ சிந்தித்திருக்கிறாயா?– எதற்காக நினைவு தெரிந்த நாளிலிருந்து தொடர்ந்து சிகரட் புகைப்பவர்களுக்கெல்லாம் இங்கு புற்று நோய் வருவதுமில்லை– வாழ்க்கையில் ஒரு போதும் சிகரட்டையே தொடாமலிருப்பவர்களுக்கு புற்றுநோய் வராது விடுவதுமில்லை! தேவைக்கு அதிகமாக உணவு உண்டு உடல் பருத்திருப்பவர்களெல்லாம் இங்கு இளமையிலேயே இறப்பதுமில்லை– அளவாக உண்பவர்கள் எல்லோரும் நீண்ட காலம் வாழ்வதுமில்லை.

ஆறு அடி நீளம்– இரண்டு அடி அகலம்– என்று தொழிற்சாலையில் இயந்திரத்தினால் வெட்டப்படும் ஒரே அளவான மரத் துண்டுகள் அல்ல மனிதன். இங்கு எல்லோருமே இன்னொரு பிரதி இல்லாத ஒரு தனி வார்ப்பு. எத்தனை கோடி மனிதர்கள் இருந்தாலும் அவர்களுக்கென ஒரு தனி மனம்– ஒரு தனி குணம்– ஒரு தனி உருவம். அந்த உருவத்திற்கு ஒரு தனி மூக்கு– தனி கண்கள்– தனி உதடு. அதே போல் தான் ஒவ்வொரு மனிதனின் இருதயம்– இரைப்பை– நுரையீரல்– சிறுநீரகம்– எல்லாமே தனி. ஒன்று போல இன்னொன்று இல்லை.

இந்த புள்ளிவிபரம் கூறும் அந்த சராசரி மனிதன் என்று இங்கு எவருமே கிடையாது.

சராசரி மனிதன் என்று ஒருவன் இங்கு இல்லாத போது– ஒரு சராசரி மனிதனுக்கு இது நல்லது– அது கெட்டது– என்று கூறுபவன் ஒரு சொக்கன்– அதை கேட்பவன் ஒரு சோழியன்.



வவுனியூர் இரா.உதயணன்

# அர்த்தங்கள் புரிவதற்கில்லை

சுமதிக்கு இரண்டு நாட்களாக நித்திரை வரவேயில்லை. இரவு முழுவதும் புரண்டு புரண்டு படுத்தாலேயொழிய மனதில் ஆழமாக வேரூன்றி நின்ற கவலைகளை எப்படி மேனனிடம் சொல்வது என்று நினைத்த வண்ணமே படுத்திருந்தாள். மேனனோ அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

சுமதியை அவளது பெற்றோர்கள் நன்றாகவே வளர்த்திருந்தார்கள். சிறுவயதிலிருந்தே பிரத்தியேகப் பாடசாலையில் விட்டு படிப்பித்து அவளை ஒரு டாக்டராக உருவாக்கிய பெருமை பெற்றோரையே சேரும்.

ஆனால், இவ்வளவு காலமும் அந்த ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்லாமல் ஏன் மறைத்தார்கள் என்று மட்டும்தான் அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஒரே பிள்ளையான தன்னை பொத்தி பொத்தி வளர்த்து, கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்து, சிந்திக்க வேண்டிய இடத்தில் சிந்திக்க வைத்த தன் பெற்றோர்களா இப்படிச் செய்தார்கள் என்று நினைக்கும் போது ஒருபுறம் கோபமும் மறுபுறம் அதற்கான காரணத்தையும் தெரிந்துகொள்ள முடியாமல் தவித்தாள் சுமதி.

மேனனுக்கும் சொல்ல முடியாமல் பெற்றோரிடம் கேட்கவும் முடியாமல் மேனனையே பார்த்தவண்ணம் அவன் பக்கமாக திரும்பிப்படுத்தாள் சுமதி.

இப்பொழுது சுமதிக்கு முப்பது வயதாகிவிட்டது. திருமணம் முடித்து ஆறு மாதங்கள்தான் ஆகியிருந்தன.

இவர்கள் அதாவது தனது பெற்றோர்கள் ஏன் இப்படி செய்தார்கள் என்ற கேள்விக்கு எப்படி விடை காண முடியும் என்று யோசித்தவளாய் மேனன் நித்திரைகொள்ளும் அழகைப் பார்த்தாள்.

மேனனை எழுப்பி அவரிடம் உண்மையை சொல்லிவிடலாமா என்றுகூடத் தோன்றியது. தனது பெற்றோர்கள் உண்மையைச் சொல்லாமல் ஏமாற்றிவிட்டார்களோ என்று மேனன் நினைத்துவிட்டால் தன்நிலை என்னவாகிவிடும் என்று நினைக்க நெஞ்சு படபடத்தது.

மேனன் ஒரு கணக்காளன். பெரிய நிறுவனமொன்றில் நிதிப்பணிப்பாளராக பணிபுரிந்து வருகிறான்.

கை நிறையச் சம்பளம், கார், வீடு என்று இருவரது வாழ்க்கையும் சந்தோசமாகத்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில முக்கியமான ஆனால், சொல்லத் திராணியற்றவளாய் - சொல்ல நினைத்த விடயங்களை மூடி மறைப்பதா அல்லது மேனனிடம் சொல்லிவிடுவதா என்று நினைத்துத் தவித்தாள் சுமதி.

பொழுது மெல்ல விடியத்தொடங்கியிருந்தது. பனிக்காலமாதலால் பனிமூட்டம் பரவலாக வெளியே எல்லாவற்றையும் மூடியிருந்தது. விடியற்காலை ஐந்து மணிக்கே எழும்பி கட்டிலில் அமர்ந்திருந்த சுமதி சாரளத்தினூடாக வெளியே பார்த்தாள்.

பல விடைதெரியாத கேள்விகளும் பனிமூட்டம் போல் அவளைச் சுற்றியிருந்தது. எழும்பி அங்குமிங்குமாக நடந்தாள்.

மேனனோ இன்னமும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

மாடிப்படிகளில் இறங்கி கீழே வந்தாள் சுமதி.

ஐந்து மணிக்கே வழமையாக எழும்பிவிடும் தாய் பாக்கியம்,

“என்ன பிள்ள வேளைக்கே எழும்பி கீழ வந்துவிட்டாய்” என்று சுமதியைப் பார்த்துக் கேட்டாள்.

“வேலை பத்து மணிக்குத்தான் தொடங்கும். ஆஸ்பத்திரிக்கு ஒன்பதரைக்குப் போனால் காணும். ஏனோ பல கேள்விகள் என்ர மனதை உறுத்திக்கொண்டிருக்கு.”

“என்ன பிள்ள சொல்ல வாறாய்” பாக்கியம் சுமதியைப் பார்த்துக் கேட்டாள்.

“எப்படிக் கேட்கிறது எண்டு எனக்கே தெரியேல்ல. அப்பா எங்க அம்மா?” சுமதி கேட்டாள்.

“அவர் இன்னும் நித்திரையால எழும்பேல்ல. நீ கேள்” என்று பாக்கியம் சொல்ல,

“என்னட்ட இருந்து எத்தனை விசயங்களை நீங்களும் அப்பாவுமாக மறைத்துவிட்டீங்கள். ஏன் சொல்லவில்லை. நான் சின்னப்பிள்ளையாக இருக்கும் போது சொல்லாமல் விட்டிருந்தால் பரவாயில்லை. வளர்ந்தபிறகு கூட உங்களுக்கு சொல்ல மனம் வரவேயில்லையே அம்மா. சொல்ல வேண்டியவற்றை சொல்லிவிட்டால் அன்பு குறைந்துவிடும் அல்லது உங்களைவிட்டுப் போய்விடுவன் என்று நினைத்தீங்களா?”

பாக்கியம் சில கணங்கள் சுமதியையே பார்த்தாள். பின்பு “என்ன சொல்லவாறாய்” என்று சுமதியைப் பார்த்துக் கேட்டாள்.

சுமதியின் கண்கள் கலங்கிவிட்டன.

“நான் சில கேள்விகள் கேட்டால், நீங்கள் கோபமோ கவலையோ படமாட்டிங்களோ” சுமதி கேட்க,

பொறுமையிழந்த பாக்கியம், “அப்படியென்ன கேள்வி கேட்கப்போறாய்?” என்று கேட்டாள்.

“அம்மா என்னை அறியாக் குழந்தைப் பருவத்திலிருந்து வளர்த்து நீங்கள் ஆளாக்கி திருமணம் முடித்துவைத்து அழகு பார்த்தாலும் நான் உங்கள் சொந்தப்பிள்ளையா?”

அவளிடமிருந்து பாக்கியம் இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. உடனே என்ன பதில் சொல்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. மௌனமாகவே கோப்பிக்குள் ஒரு கரண்டி சீனியைப்போட்டுக் கரைத்தாள். பின்பு திரும்பி சுமதியைப் பார்த்தாள்,

“ஏன் இப்ப இந்தக் கேள்வியைக் கேட்கிறாய்?”


“உண்மையைச் சொல்லுங்கள் அம்மா. நான் உங்கள் கருவறையிலிருந்து வந்தவளா?” கண்கள் நீரால் நிரம்பி வழிய கண்ணீரைத்துடைத்த வண்ணம், “சொல்லுங்க அம்மா” என்று கெஞ்சினாள்.

பாக்கியத்தின் கண்களும் கலங்கி கண்களில் நீர் முட்டியது.

பாக்கியம் தலையை இல்லை என்பதற்கு அடையாளமாக ஆட்டிக்கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

“ஏனம்மா நான் உங்கட வளர்ப்புப்பிள்ளை என்று இவ்வளவு நாளும் சொல்லேல்ல” சுமதி கேட்க,

“உன்னை கைக்குழந்தையாக ஒன்றுமே அறியாத பருவத்தில கொழும்பில ஒரு ஆஸ்பத்திரியில பிறந்தவுடனேயே அனாதையாக விட்டுவிட்டு உன்ர தாய் போய்விட்டாள். எனக்கு பிள்ளை பெறும் பாக்கியம் இல்லை என்று டாக்டர் சொல்லிவிட்டார். அதனால் நானும் உன்ர அப்பாவுமாக சேர்ந்து உன்னை தத்தெடுப்பதாக முடிவெடுத்து முறைப்படி தத்தெடுத்து உன்னைக் கைக்குழந்தையாக இங்கு கொண்டுவந்தோம். நீ ஒரு வயதுக்கு வந்த பிறகு சொல்லிவிடலாம் என்றுதான் நினைத்தோம். ஆனால், தாய் தந்தை பாசம் அந்த உண்மையை உன்னிடம் சொல்லத் தடுத்தது.”



சுமதி ஒன்றும் சொல்லாமல் வழிந்துகொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தவண்ணம் “எனக்கு எப்படித் தெரியவந்தது என்று கேட்கவில்லையே?”என்று சொன்னாள்.

பாக்கியம் ஒன்றும் சொல்லாமல் சுமதியையே பார்த்தாள்.

எனது கடவுச்சீட்டை தேடி உங்கட அலுமாரியைத் திறந்து ஒவ்வொரு தட்டாக பார்க்கும் போது மேல் தட்டில் ஒரு பைல் என் கைகளுக்கு எட்டியது. அதைத் திறந்து பார்த்த போதுதான், நான் உங்களால் தத்தெடுக்கப்பட்ட பிள்ளை என்ற உண்மை எனக்குத் தெரிஞ்சுது”

“நான் ஒருமுறை என்னைப் பெற்றெடுத்த அம்மாவைப் போய்ப் பார்க்க விரும்பறேன். நீங்கள் அனுமதிப்பீர்களா அம்மா”

அவளது ஆசைக்கு பாக்கியத்தால் ஒரு பதிலும் சொல்ல முடியவில்லை. “மேனனுக்கு இந்தக்கதை தெரியுமா?” நடுக்கத்தோடு கேட்டாள் பாக்கியம்.

“இனித்தான் சொல்லப்போறன்”

“நானும் உன்ர அப்பாவும் ஏதோ ஒரு கட்டத்தில் இந்த உண்மையை உனக்கு சொல்லியிருக்கவேணும். அது எங்கட பிழைதான். மன்னிச்சுடு சுமதி.”

பாக்கியம் அழுதுகொண்டே இரு கைகளையும் கூப்பினாள்.

சுமதி ஒன்றும் சொல்லவில்லை. “உன்மீது வைத்திருந்த அளவு கடந்த பாசத்தை விட்டுக்கொடுக்க இயலாது சுமதி. அதனாலதான் மனம் திறந்து சொல்ல முடியேல்ல”

“பரவாயில்லை அம்மா. நான் மேனனுக்கு உண்மையைச் சொல்லி இரண்டு பேருமாக ஒரு மாத லீவு போட்டுவிட்டு கொழும்புக்குப் போய் தேடப்போறம்.”

பாக்கியம் ஒரு பதிலும் சொல்லவில்லை. கோப்பியைப் போட்டு எடுத்துக்கொண்டு மாடிப்படிகளில் ஏறி மேனனிடம் சென்றாள் சுமதி.

கட்டிலில் எழும்பி அமர்ந்திருந்த மேனனிடம் கொடுத்துவிட்டு உண்மையை விளக்கினாள் சுமதி. முதலில் அதிர்ச்சியடைந்த மேனன் தன்னை சமாளித்துக்கொண்டான்.

அவனோ சுமதியிடம் தேவையில்லாத கேள்விகள் ஒன்றும் கேட்கவில்லை. அவளோடு கொழும்பு செல்ல உடன்பட்டான்.

இரண்டு வாரங்களின் பின்பு ஒரு மாத லீவு போட்டுவிட்டு கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றார்கள் மேனனும் சுமதியும். தான் பிறந்த ஆஸ்பத்திரிக்குச் சென்று தான் பிறந்த ஆண்டையும் பெயரையும் சொல்லி பதிவைத் தேடினார்கள். ஒன்றும் கிடைக்கவில்லை. தரகர்கள் மூலமாக இருவரும் கொழும்பில் தேடாத இடமேயில்லை.

தொடர்ச்சி 21–ம் பார்க்க

வேல் தர்மா



# ஈரானின் வீரமும் ஹோமஸ் நீரிணையும்




இரண்டு பெரிய கடற்பரப்புக்களை ஒரு அகலம் குறைந்த நீரிணையால் அல்லது கால்வாயால் இணைக்கப்படும் இடம் கடல்சார் திருகுப்புள்ளி (*Marine Choke Point*) எனப்படும். பனாமா கால்வாய், சூயஸ் கால்வாய், மலாக்கா நீரிணை, ஹோமஸ் நீரிணை எனப் பல கடல்சார் திருக்குப்புள்ளிகள் உள்ளன. அவற்றில் எரிபொருள் போக்குவரத்திற்கு ஹோமஸ் நீரிணை மிக முக்கியமானதாகும். ஒரு நாளைக்கு 1.2 பில்லியன் டொலர் பெறுமதியான எரிபொருள் பயணிக்கும் ஹோமஸ் நீரிணையை பாதுகாப்பாக வைத்திருத்தல் உலகப் பொருளாதாரத்திற்கு அவசியம். ஆசிய நாடுகளுக்குத் தேவையான எரிபொருளின் 75% ஹோமஸ் நீரிணையூடாகவே செல்கின்றது. ஈராக், ஈரான், சவுதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றின் இடையில் உள்ள பாரசீக வளைகுடாவையும் ஈரானுக்கும் ஓமானுக்கும் இடையில் உள்ள ஓமான் வளைகுடாவையும் ஹோமஸ் நீரிணை இணைக்கின்றது. இந்த நாடுகள் அதிக எரிபொருள் உற்பத்தி செய்யும் நாடுகளாகும்.

### ஈரானின் அணுகுண்டு உற்பத்தி

ஈரானின் அணுகுண்டு உற்பத்தி முயற்சியை அமெரிக்காவும் இஸ்ரேலும் இணையவெளித் தாக்குதல், விஞ்ஞானிகள் கொலை எனப் பல சதி நடவடிக்கைகளால் முறியடிக்க முயன்றன. ஈரான் மீது பொருளாதாரத் தடை கொண்டு வரப்பட்டது. 2015-ம் ஆண்டு ஜூலை மாதம் அமெரிக்கா, பிரித்தானியா, இரசியா, பிரான்ஸ், சீனா ஆகிய வல்லரசு நாடுகளும் ஜேர்மனியும் ஈரானின் அணுகுண்டு உற்பத்தியை மட்டுப்படுத்தும் ஒப்பந்தம் கைச்சாத்திட்டு பொருளாதாரத் தடை நீக்கப்பட்டது. அதை இஸ்ரேலும் சவுதி அரேபியாவும் கடுமையாக எதிர்த்தன. உலக யூதச் செல்வந்தர்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்து மீண்டும் பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தார். அமெரிக்கா பல நாடுகள் மீதும் எரிபொருள் விநியோக நிறுவனங்கள் மீதும் பொருளாதாரத் தடை மிரட்டல் மூலம் ஈரானின் எரிபொருள் ஏற்றுமதியை தடைசெய்து கொண்டிருக்கின்றது. அதைத் தொடர்ந்து ஹோமஸ் நீரிணையூடாக எரிபொருள் எடுத்துச் செல்லும் தாங்கிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலை ஈரானே செய்தது என்ற குற்றச்சாட்டை ஈரான் மறுத்தது.

### கப்பல்களைக் கைப்பற்றிய ஈரான்

2019-07-10 புதன் கிழமை மூன்று ஈரானியப்படகுகள் ஹோமஸ் நீரிணையில் வைத்து பிரித்தானிய Heritage என்னும் எரிபொருள் தாங்கியை இடைமறித்து அதை தமது பகுதிக்குள் செல்லப் பணித்தனர். அந்த உத்தரவை அமெரிக்கக் கடற்படை ஒலிப்பதிவு செய்துள்ளது. பிரித்தானியாவின் HMS Montrose என்னும் போர்க்கப்பல் அங்கு சென்று ஈரானியப் படகுகளை எச்சரித்து விலகச் செய்து தாங்கிக்கப்பலைப் பாதுகாத்தது. பிரித்தானியக் கப்பல்களை வளைகுடாப் பிராந்தியத்தில் பாதுகாக்க HMS Duncan என்ற பிரித்தானிய நாசகாரிக் கப்பல் கருங்கடலில் நேட்டோப் படைகளுடன் செய்து கொண்டிருந்த பயிற்சியை இடை நிறுத்திவிட்டு வளைகுடா நோக்கி விரைந்தது. இது ஒரு பில்லியன் பவுண்கள் பெறுமதியான புதிய நாசகாரிக் கப்பல் ஏவுகணைகளும் நீர்மூழ்கிக்கப்பல்களை எதிர்க்கும் தொழில்நுட்பமும் உள்ள கப்பல். 2019 ஜூலை 19-ம் திகதி பிரித்தானியக் கொடியுடன் ஹோமஸ் நீரிணையூடாகப் பயணித்த இரண்டு எண்ணெய்த் தாங்கிக் கப்பல்களை ஈரான் கைப்பற்றியது. அதில் ஒன்று பிரித்தானியருக்குச் சொந்தமானது, மற்றது சுவிஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானது. பிரித்தானியருக்குச் சொந்தமான மெஸ்டர் கப்பல் சூழல் விதிகளை மீறியதற்காக எச்சரிக்கப்பட்டு ஈரானால் விடுதலை செய்யப்பட்டது. ஸ்டென் இம்பெரோ என்ற மற்றக் கப்பலின் ஊழியர்கள் இந்தியா, இரசியா, லத்வியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். மேலும், ஈரானும் அமெரிக்காவும் ஒன்றினது ஆளில்லா வேவு விமானத்தை மற்றது தாக்கியழித்தன.

### மேற்கு நாடுகளுக்கு பாதிப்பில்லை

ஹோமஸ் நீரிணையூடான எரிபொருள்தாங்கிக் கப்பல்களின் பயணத்தை 1980களில் ஈரான் குழப்பிய போது பிரித்தானியாவிற்குத் தேவையான எரிபொருளின் 10% வளைகுடாப் பிராந்தியத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இப்போது எதையும் இறக்குமதி செய்வதில்லை. பிரான்ஸுக்குத் தேவையான எரிபொருள் இறக்குமதி 1980களில் 24% வளைகுடாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. இப்போது 4% மட்டுமே.

இஸ்ரேல் ஏற்கனவே ஈரானின் பல படை நிலைகளைப் பற்றி தகவல்கள் திரட்டி வைத்துள்ளது. இஸ்ரேலிய விமானங்கள் அமெரிக்க விமானங்கள் போல் ஈரானைத் தாக்கலாம்.

எந்தத் தாக்குதலாலும் ஈரானியர்களின் அணுகுண்டு தொடர்பான தொழில்நுட்ப அறிவை அழிக்க முடியாது. தாக்குதலின் பின்னர் ஈரான் ஆத்திரம் கொண்ட வேகத்தில் அணுகுண்டு உற்பத்தி செய்யலாம்.

### பிராந்திய வல்லரசாக விரும்பும் ஈரான்

1979-ம் ஆண்டு நடந்த ஈரானிய மதவாதப் புரட்சியில் இருந்தே அமெரிக்காவுடன் ஒரு மோதல் நிலையை ஈரானிய மதவாத ஆட்சியாளர்கள் உருவாக்கியிருந்தார்கள். 2015-ம் ஆண்டு ஈரானியப் புரட்சி மற்ற இஸ்லாமிய நாடுகளுக்கும் பரப்பப்படும் என ஈரானியப் படைத்துறை பகிரங்கமாக அறிவித்தது. இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருக்கக் கூடாது என்பதில் ஈரான் என்றும் உறுதியாக இருக்கின்றது. சிரியப் போரில் ஈரான் தன்னை ஒரு பிராந்திய வல்லரசாகக் காட்ட முயன்றது. சிரியா, ஈராக், லெபனான், யேமன், லிபியா ஆகிய நாடுகளில் ஈரான் தன் ஆதிக்கத்தை அல்லது ஆதிக்க ஆவலை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றது. மேற்காசியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் ஒரு புதிய வல்லரசாக ஈரான் உருவெடுக்க முயல்கின்றது. இதை இஸ்ரேலும் சவுதி அரேபியாவும் கடுமையாக எதிர்க்கின்றன.

ஹோமஸ் நீரிணையூடாகச் செல்லும் எரிபொருளைத் தடை செய்வதன் மூலம் தன்மீதான பொருளாதாரத் தடையை நீக்க ஈரான் முயல்வதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. ஹோமஸ் நீரிணையூடான எரிபொருள் போக்குவரத்து தங்கு தடையின்றி நடப்பதை பல நாடுகள் விரும்புகின்றன. இதனால் பாரசீக வளைகுடாவிலும் ஹோமஸ் நீரிணையிலும் ஒரு போர் வரலாம் என்ற அச்சம் உருவாகியுள்ளது. ஈரான் தன்னிடம் உள்ள சிறப்புப்படையினரைக் கொண்டு தானே உற்பத்தி செய்த ஏவுகணைகள் மூலம் எதிரிகள் மீது தாக்குதல் நடத்தலாம். அத்துடன் ஈரானின் ஆதரவுடன் செயற்படும் ஹிஸ்புல்லா போன்ற பல்வேறு படைக்குழுக்கள் மூலம் அமெரிக்கா மீதும் அதன் நட்பு நாடுகள் மீதும் தாக்குதல் நடத்தலாம். ஹோமஸ் நீரிணையில் ஒரு கப்பல் தீப்பிடித்தாலே பெரும் போக்குவரத்துத் தடை ஏற்படலாம். ஈரான் 400 துரிதப் படகுகளில் இருந்து 500 ஏவுகணைகளை வீசினால் அவற்றில் 50 ஏவுகணைகளாவது எதிர்ப்புக்களை மீறி இலக்கைத் தாக்கும். அதனால் ஒரு விமானம் தாங்கிக் கப்பலையே அழிக்க முடியும். ஆனால், ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் செய்வதை இஸ்ரேல் விரும்பவில்லை. இஸ்ரேலுக்கு விருப்பமில்லாத ஒன்றை அமெரிக்கா செய்யாது. அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானில் இருந்து எரிபொருள் ஏற்றுமதி செய்வதை முற்றாக தடை செய்து ஈரானை அடிபணிய வைக்கவே விரும்புகின்றன. ●

**கலைஞர் டி.வியில் ஈழத்து எழுத்தாளர்**

**கனடாவில் வாழும் பிரபல ஈழத்து எழுத்தாளர் குரு அருவிந்தன் எழுதிய 'ஒரு அப்பா, ஒரு மகள், ஒரு கடிதம்' என்ற 'கல்கி' இதழில் வெளிவந்த சிறுகதையைக் 'கலைஞர்' தொலைக்காட்சிக்காக குறுந்திரைப் படமாக்கியிருக்கிறார்கள். இந்தக் கதை இதுவரை ஆறு மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

# போகிற போக்கில்...



ஏ.ஜே.ஞானேந்திரன்

## சொகுசுப் படகில் விலை உயர்ந்த ஓவியம்

உலகின் மிக விலை உயர்ந்த ஓவியம் சவுதி அரேபிய முடிக்குரிய இளவரசரின் சொகுசுப் படகில் இருப்பதாகத் தகவல் வெளிவந்துள்ளது. 500 வருட கால லியோனார்டோ டா வின்சி தீட்டிய அந்த சல்வட்டோர் முண்டி ஓவியம் 2017ஆம் ஆண்டு 450 மில்லியன் டொலருக்கு விற்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, அந்த ஓவியத்தின் தகவல் இப்பொழுது வெளியிடப்பட்டுள்ளது. சவுதி முடிக்குரிய இளவரசர் முகமது பின் சல்மானின் சொகுசுப் படகில் அது வைக்கப்பட்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள். சல்வட்டோர் முண்டி Salvator Mundi (உலக மீட்பர் என்று இலத்தீனில் பொருள்படும்) ஓவியம் லியோனார்டோ டா வின்சி கைவண்ணத்தில் உருவான மிகச்




சிறந்த ஓவியங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது.இருளில் இருந்து இயேசுநாதர் தோன்றுவதைப் போன்று அதில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அந்த ஓவியம் தொடர்பான சர்ச்சையும் நிலவி வருகிறது. அதனை லியோனார்டோ டா வின்சி வரையவில்லை என்றும், அவரது ஓவியப் பட்டறையில் இருந்த மற்றவர்கள் வரைந்தனர் என்றும் கூறப்படுகிறது. 2017ல் மர்மமாக விற்பனைக்குள்ளாகிய இந்த ஓவியம், இப்பொழுதுதான் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. உலகின் 52 வேறுபட்ட இடங்களில் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளார்கள்.

## பிளாஸ்டிக் சாப்பிடுகிறோமா?

உலகிலுள்ள ஒவ்வொருவரும் வாரத்துக்கு 5 கிராம் வரையிலான பிளாஸ்டிக்கை உட்கொள்ளக்கூடுமென நம்பப்படுகிறது. அது ஒரு கடனட்டையை உட்கொள்வதற்கு சமமாகும். அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நியூகாஸில் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வில், குடிநீர் மூலமாகவே, மிக அதிகமான பிளாஸ்டிக், மனிதர்களின் உடலில் சென்று சேர்வது தெரியவந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக, கிளிஞ்சல் வகைக் கடல் உயிரினங்கள் மூலமாக, பிளாஸ்டிக் மனித வயிற்றுக்குள் போகிறது. அந்தக் கிளிஞ்சல் உயிர்களை மொத்தமாக உட்கொள்வதால், அவற்றின் செரிமான மண்டலத்தில் உள்ள பிளாஸ்டிக், மனிதர்களின் வயிற்றுக்கும் செல்கிறது. 2000ஆம் ஆண்டுக்குப் பிந்திய உலகில் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கின் அளவு, அதற்கு முந்திய எல்லா ஆண்டுகளிலும் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக்கின் அளவுக்குச் சமமாகும். குடிநீரில் இருந்துமட்டும் சராசரியாக ஒருவர், 1,769 பிளாஸ்டிக் துகள்களை உட்கொள்வதாக மதிப்பிடப்படுகிறது. அமெரிக்காவில் சோதிக்கப்பட்ட குடிநீர் மாதிரிகளில், சுமார் 95 வீதமான மாதிரிகளில், பிளாஸ்டிக் நுண்ணிழைகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒப்பீட்டளவில் ஐரோப்பிய நாடுகளில் சுமார் 72



வீதமான மாதிரிகளில் மட்டுமே பிளாஸ்டிக் நுண்ணிழைகள் இருந்தன. இடத்துக்கு இடம் பிளாஸ்டிக் கலப்படத்தின் அளவு வேறுபடுகிறதே தவிர, பிளாஸ்டிக் கலப்படம் இல்லாத இடம் இல்லை என்று அந்த ஆய்வு சுட்டிக்காட்டியுள்ளது.

## விண்வெளிக்கு உல்லாசப் பயணம்..



இனி சுற்றுலாவில் "மேலே போகும்" வாய்ப்பு மனிதர்களுக்கு கிடைக்கப் போகின்றது. நிரந்தரமாக ஒரு விண்வெளி ஆய்வு நிலையத்தை விண்வெளியில் நிறுவியுள்ள நாஸா, உல்லாசமாக அங்கே போய் இருந்து விட்டு வாருங்கள் என்று பயணிகளை அனுப்பத் தயாராகி வருகின்றது. இந்த நிலையம் பூமியின் ஈர்ப்பு ஆற்றலில் பூமியை 15.7 முறை சுற்றி வருகிறது. இந் நிலையத்தில் இருந்தபடி, தினமும் 16 முறை சூரியோதயத்தையும் மறைதலையும் காணமுடியும். சுளையாக 35,000 டொலர்கள் ஓர் இரவுக்கு செலவழிக்க தயாராக இருந்தால், நீங்களும் ஒரு பயணியாகலாம். ஆண்டுக்கு இரு தடவைகள் தனிப்பட்ட விண்வெளிப் பயணங்களை ஒழுங்கு செய்ய நாஸா திட்டமிட்டு வருகின்றது. அமெரிக்க விண்வெளிக் கப்பலில் பயணித்து, அதிக பட்சம் 30 நாட்கள் தங்க முடியும். SpaceX என்ற தனிப்பட்ட ஒரு நிறுவனத்தின் விண்வெளிக் கப்பலில் ஒரு ஆசனப் பதிவுக்கு, தலைக்கு 52 மில்லியன் டொலர் கொடுத்தாக வேண்டும். (ஆளைவிடு சாமி என்கிறீர்களா?) நமக்கு இது சாத்தியப்படாவிட்டாலும், கத்தை கத்தையாக பணத்தை வைத்துக்கொண்டு, முழி பிதுங்குபவர்களுக்கு இந்தப் பயணங்கள் தேவைப்படலாம். போயிங் நிறுவனமும் விண்வெளிக் கப்பல்களை தயார்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகிறதாம். ஆகாயத்திலும் போக்குவரத்து நெருக்கடி வரப்போகிறது. ஜாக்கிரதை!

## போர் நிலங்களும் மனநோயாளிகளும்



உலக சுகாதார நிறுவனத்தின் மனநல மற்றும் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் பணியாற்றும் மார்க் வேன் ஓமர்மேன் என்பவர் போர்க் காலங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து ஆய்வு ஒன்றை மேற்கொண்டார். இந்த ஆய்விற்கென மார்க், ஒரு குழுவினை உட்படுத்தினார். இந்த ஆய்வின் முடிவுகள் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவக்கூடுமென இவர் தெரிவித்துள்ளார். போர் நடைபெற்ற பகுதிகளில் உள்ள மக்கள் தொகையில் 9 வீதமானவர்கள் சாதாரணமான மன அழுத்தம் முதல் அதி தீவிர மன அழுத்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். இது உலக அளவில் போர் அல்லாத பகுதிகளில் வாழும் மனநோயாளிகளின் எண்ணிக்கையை விட மிக அதிகம் என்ற உண்மையை இவர்கள் கண்டறிந்துள்ளார்கள். இந்த மன அழுத்தம் அதி தீவிரமாக ஆண்களை விட பெண்களுக்கே அதிகமாக உள்ளது என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு 1980 முதல் 2017ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் எடுக்கப்பட்டது. உலகம் முழுவதும் நடைபெற்ற போர், இயற்கை பேரிடர், மருத்துவ அவசர நிலை ஆகிய சமயங்களில் இவை 39 நாடுகளில் எடுக்கப்பட்டன. எபோலோ நோயால் பாதிக்கப்பட்டவர்கள் வரை இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வு குறித்து மார்க் கூறுகையில், 'என்னதான் மோசமான சூழல் போர் நடைபெறும் இடங்களில் இருந்தாலும், அரசியல் ரீதியான உதவிகள் கிடைத்தால் மக்களின் மன அழுத்தத்தை போக்க சர்வதேச அமைப்புகளால் சிறப்பாக இயங்க முடியும்' என கூறியுள்ளார்.

## வேலை வாங்கப்படும் சிறுசுகள்

பால்ய வயதில் பாவம் பார்க்காமல் சிறுசுகளிடம் கடின வேலைகளை ஒப்படைப்பவர்கள் பாவிகள் என்றுதான் அழைக்கப்பட வேண்டும். அந்த அளவுக்கு பால்ய விவாகம் போல, சிறுவர் சிறுமியரிடம் கடின வேலை வாங்குவது, பல உலக நாடுகளில் காணப்படுகின்றது. ஐ.நா. சபையின் "ஐஎல்ஓ" பிரிவு இதற்காக ஜூன் 12ஆம் திகதியை சிறுவர்களிடம் கடின வேலை வாங்குவதற்கு எதிரான நாளாகப் பிரகடனம் செய்திருக்கின்றது. இந்த நாளில் அரச நிறுவனங்கள், தனியார் அமைப்புகள் இதை ஒழிப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுள்ளது. ஐ.நா. வெளியிட்டுள்ள சமீபத்தைய அறிக்கையில், "இன்றைய அளவில் 152 மில்லியன் பிள்ளைகள் வேலை செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். எனவே இது ஒரு பெரிய பிரச்சினை என்பது உங்களுக்கு நன்றாகவே




புரிந்திருக்கும்" என்று கூறியவர்கள், பத்துப் பேரில் ஏழுபேர் விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் கண்டறிந்துள்ளார்கள். பிள்ளைகளைக் கடின வேலைகளிலிருந்து மீட்போம் என்ற இந்த அமைப்பின் முன்னெடுப்பு, 2019இல் 100 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமை சிறப்புக்குரியது. 1919இல்தான் இந்தப் பிரச்சாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது. 2025அளவில், பிள்ளைகளிடம் வேலை வாங்குவது முற்றாக ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது இந்த அமைப்பின் இலக்கு! சாத்தியப்படுமா? திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது...



சரோஜினி சந்திரகோபல்




# சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மூத்தோர் அசத்திய மாலைமாருதம் - 2019

சைவ முன்னேற்றச் சங்கத்தின் ஓர் அங்கமான நால்வர் மூத்தோர் அமைப்பின் ஆண்டுவிழா, சமீபத்தில் *Ilford, Woodbridge High School*-இல் சிறப்பாக நடந்தேறியது. மங்கள விளக்கினை ஏற்றி, திருமுறை, தமிழ்த்தாய் வாழ்த்து யோகர் சுவாமிகள் பாடல், பண்ணிசை என அடுத்தடுத்துப் பாடி, ஒளியும் நாமே, ஒலியும் நாமே என விழிகளில் பெருமை பொங்க மேடையேறிய மூத்தோருக்கு இணை மூத்தோரே. மேடையில் மாருதமாக வீசிய மூத்தோரின் பேச்சிலும், நடிப்பிலும் மூழ்கித் திணறித் திளைத்தனர் பார்வையாளர்கள்.

முதலில் மேடையேறிய, சங்க மாதர் அணியினரின் "காத்தவராயன் கூத்து", கடல் கடந்து வந்தாலும், எம் கலை - கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக் காப்போம் என்று மார்தட்டி நின்றது . தொடர்ந்து மேடையேறிய சைவ முன்னேற்ற சங்கத்தினரின் மெய்ப்பொருள் நாயனார் வில்லுப்பாட்டு, சகுந்தலை மற்றும் யாருக்குச் சொந்தம் போன்ற நாடகங்களும் இலக்கியச்சுவை மிக்கவையாகவும், சமூக, வாழ்வியல் சிக்கல்களைப் படம் போட்டுக் காட்டுபவையாகவும் அமைந்திருந்தன. *Walthamstow*, கற்பக விநாயகர் ஆலயம் வழங்கிய "ஆரோக்கியமும் சுக வாழ்வும்" நாடகம் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் கூற்றை வலியுறுத்தி நின்றது. புலம்பெயர் வாழ்வில் நாம் முகம் கொடுக்கும், அன்றாட நடைமுறைச் சிக்கல்களை, அதனால் விளையும் மனஉளைச்சல்களை எம் கண்முன் நிறுத்திச் சிந்திக்க வைத்தது *Ilford*, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய மூத்தோர் சங்கத்தினர் வழங்கிய நாடகம் "நாங்கள் எங்கே போகிறோம்?". "அடுத்தாத்து அம்புஜத்தைப் பார்த்தேலோ" பாடலுக்கு, அழகாக அபிநயித்து பழமையின் பெருமைக்கு மெருகூட்டி, சபையோரைச் சிரித்து ரசிக்க வைத்தது *Newham* தமிழர் நலன்புரிச் சங்க மூத்தோரின் "பட்டுவும் கிட்டுவும்" நாடகம்.

மேடை நிகழ்வுகளுடன் ஒருமித்துக் குதூகலித்திருந்த சபையோரை மௌனிக்க வைத்தது சட்டத்தரணி திரு. சிதம்பரப்பிள்ளை அவர்களது பேச்சு, "முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்", தாயக போர்ச்சூழல் விட்டுச் சென்ற வடுக்கள், புரையோடிப்போன ரணங்கள், வலி மிக்க அந்த வரலாறுதனை அமைதியாக, ஆணித்தரமாக, பேசினார்.

காலங்கள் காற்றோடு கலந்து கடந்தாலும், நாம் கடந்து வந்த பாதையினை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வது, நாம் நாமாக வாழப் பெரிதும் உதவுமென்பதனை அவர் பேச்சு தெளிவு படுத்தியது. தாயக மண்ணில் வாழும் நம் உறவுகளின் இன்றைய நிலை, அவர்களது வாழ்வாதாரப் போராட்டம் பற்றிய வரிகள் சபையோர் கண்களைக் குளமாக்கின. இவ்விழாவின் பிரதம விருந்தினராக டாக்டர் இரத்தினம் நித்தியானந்தன் தனது துணைவியாருடன் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக சிவஸ்ரீ வசந்தன் குருக்கள் வருகை தந்தார். மேடையில் பிரதம, சிறப்பு விருந்தினர்களுடன் சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு.தர்ம இரபீந்திரமோகன் அவர்களும், அவரது துணைவியாரும் கௌரவிக்கப்பட்டனர். பிரதம விருந்தினர் பேசுகையில், மூத்தோரது திறமைகளைக்




கண்டு தான் ஆச்சரியப் பட்டதாகவும், அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைக் காண மனநிறைவாக இருப்பதாகவும் கூறினார். மூத்தோர்கள், அவர்களது திறமைகள், மதிக்கப்படவேண்டும். அவர்கள் சந்தோசமாக வாழவேண்டும் என்பதில் டாக்டர் அவர்கள் கொண்டுள்ள ஆர்வம் அவரது பேச்சில் வெளிப்பட்டது. அதற்கான தளத்தினை அமைத்துக் கொடுத்துள்ள சைவ முன்னேற்றச் சங்கத்தினரையும் போற்றினார். தொடர்ந்து நடைபெற்ற வசந்தன் குருக்கள் அவர்களது ஆசியுரை, வழமைபோல சிறப்பாகவும், சபையோரைச் சிரிக்க வைப்பதாகவும் அமைந்தது. மூத்தோர் விழாவில் பங்கெடுத்த இளையோரின் *"Justfusion"* நடனம் மற்றும் *IBC* தங்கக் குரல் வெற்றியாளரான செல்வி தேனுகா சிவநேசராஜா, செல்வி நிஷானி சாந்தகுமார் ஆகியோரது இனிமையான பாடல்களும் விழாவிற்கு மெருகூட்டின. மூத்தோரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குப் பக்கபலமாக மிருதங்கம் வாசித்த செல்வன் நிகேஷ் நிரஞ்சன், செல்வன் ராகாஷ் நிரஞ்சன் இருவருமே பாராட்டுக்குரியவர்கள். "யாருக்குச் சொந்தம்" நாடகத்தில் பின்னணிக் குரல் கொடுத்து மூத்தோரை ஊக்குவித்த நால்வர் தமிழ்க் கலை நிலைய ஆசிரியை திருமதி சுதர்சினி வாகீசனுக்கு சிறப்பான பாராட்டுக்கள். திருமதி காந்தி சூரியகுமாரின் நடராஜர் துதி நடனமும் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. சங்க பொதுச் செயலாளர் வரவேற்புரை வழங்கினார். சங்கத் தலைவர் திரு. தர்ம இரபீந்திரமோகன் அவர்கள் சங்க வரலாறு பற்றி சிறப்புரை வழங்கினார். உருண்டோடிய அழகிய ரதத்தின் அச்சாணிகளாக, நிகழ்ச்சியினை நகர்த்திச் சென்றனர் திருமதி நவராணி சுரேந்திரன், திருமதி அஞ்சு ராமதாஸ் இருவரும். நால்வர் மூத்தோர் நிலையத் தலைவரும், சங்கத்தின் சமூக சேவைச் செயலாளருமான திரு.வாமனானந்தன் நன்றியுரை வழங்கினார். சங்கத்தின் மூத்தோர் ஆண்டு விழாவிற்கு தலைமை அதிதியாக, மூத்தோர் நிலையமொன்றிற்கு பொறுப்பாக இருக்கும் டாக்டர் நித்தியானந்தன் அவர்களை தலைமை விருந்தினராக அழைத்தமை சிறப்பம்சம். மொத்தத்தில், முத்தமிழின் சுவை கலந்த, சத்தான கருத்துக்கள் கொண்ட, முத்தான மூத்தோர் நிகழ்ச்சி ஒன்றினைக் கண்டு களித்த திருப்தியுடன் வீடு திரும்பினர் பார்வையாளர்கள். ●



## பிரமாண்டமாக தயாராகும் ராமாயணத்தில் சீதை நயன்!

பிரமாண்டமாக உருவாகும் ராமாயணம் படத்தில் நடிகை நயன்தாரா மீண்டும் சீதையாக நடிக்க உள்ளார். நடிகை நயன்தாரா ஹீரோயின்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்த கதைகளை தேர்வு செய்து நடித்து வருகிறார். கடந்த 2011ஆம் ஆண்டு வெளிவந்த ஸ்ரீராம ராஜ்ஜியம் படத்தில் சீதையாக நடித்தார். நடிகர் பிரபுதேவாவை திருமணம் செய்துகொள்ள முடிவு செய்த அவர், ஸ்ரீராம ராஜ்யமே தனது கடைசி படம் என அறிவித்தார். ஆனால், அவர் நினைத்ததை போல் பிரபு தேவாவை திருமணம் செய்துகொள்ள முடியவில்லை. இருவரும் மனக்கசப்பால் பிரிந்து விட்டனர். இந்நிலையில் 3டியில் மிக பிரமாண்டமாக தயாராக உள்ளது இந்த ராமாயணம் காவியம். இதுவரை 'ராமாயணம்' குறித்த பல படங்கள் வெளியாகியுள்ள நிலையில், தற்போது முழுக்க முழுக்க 3டியில் உருவாகிறது. அல்லு அரவிந்த் தயாரிக்கிறார். இந்த படத்தை இந்தியில் தாங்கல் படத்தை இயக்கிய நிதிஷ் திவாரி, ஸ்ரீதேவி நடித்த 'மாம்' படத்தை இயக்கிய ரவி உத்யவார் ஆகியோர் இணைந்து இயக்க உள்ளனர். பிரபல தெலுங்கு பட அதிபர் அல்லு அரவிந்த் ராமாயணம் படத்தை தயாரிக்கிறார். ரூ.1,500 கோடி செலவில் மூன்று பாகங்களாக தயாராகிறது. ஒவ்வொரு பாகத்துக்கும் தலா ரூ.500 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் இந்த ராமாயணம் திரைப்படம் உருவாக்கப்படுகிறது. இந்த படத்தின் படப்பிடிப்பு டிசம்பரில் தொடங்குகிறது. முதல் பாகம் 2021ம் ஆண்டு வெளியாகும்.

## 53வது வயதில் நடிகை ரேவதி!



நடிகை ரேவதிக்கு சமீபத்தில் 53வது பிறந்தநாள். இப்போது சன் டிவியின் அழகு சீரியலில் மிக அருமையாக நடித்து வருகிறார். நமக்கும் தினமும் நல்ல நடிகை, அழகான நடிகை ரேவதியைப் பார்த்த திருப்தி. கேரளாவை பூர்வீகமாகக் கொண்ட ரேவதியின் நிஜப்பெயர் ஆஷா. இயக்குநர் இமயம் ராசி பார்த்து ஆங்கில எழுத்து "R" வரிசைப்படி பெயர் வைப்பது போல ஆஷாவுக்கும் ரேவதி என்று பெயர் சூட்டினார். நடிகை ரேவதியின் தந்தை ராணுவ துறையில் அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பதால் ராமாவரம் ராணுவ குடியிருப்பில் ரேவதி பெற்றோருடன் வசித்து வந்தவர். பி.ஏ. ஆங்கில இலக்கியம் படித்து முடித்து சினிமாவுக்கு வந்தவர்தான் அழகு ரேவதி. பேட்மிட்டன் விளையாட்டில் ஆர்வம் மிக்க ரேவதி, தினமும் காலையில் ராமாவரம் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் விளையாடுவதைப் பார்க்கவே பையன்கள் காத்திருப்பாங்களாம். இப்படித்தான் பாரதிராஜாவுக்கு ரேவதி பற்றிய தகவல் போயிருக்கு. மண்வாசனை படத்துக்கு கடைசியாகத் தேர்வு செய்யப்பட்டவர் ரேவதி. சின்ன உருவம், மெல்லிய உடல்வாகு, மிக அழகிய முகம் என்று அசத்தும் அழகில் இருந்தார் ரேவதி. பாரதிராஜா எக்ஸ்பிரஷன் சொல்லித் தரும் அழகை மிகவும் ரசிப்பாராம். இயக்குநரை விட்டு, அங்கும் இங்கும் நகராமல் பாரதிராஜாவை வெகுவாக ரசிப்பாராம். 'மல்லிகை மொட்டு பொத்தி வச்ச மல்லிகை மொட்டு' பாடலில் பார்த்தால் தெரியும். இவருக்கு கார்த்திக் மிகவும் பிடித்த நடிகர். கமல்ஹாசன், பிரபு, கார்த்திக், விஜயகாந்த் என்று இவர் நடித்த எல்லா நடிகர்களுடனும் நெருக்கமாக நடித்து இருந்தாலும் இவருக்கு பெரிய பிளஸ் நடிப்பிலோ, உருவத்திலோ எந்த ஆபாசமும் கவர்ச்சியும் தெரியாது. ஆனால், அழகு மிளிரும். 'மவுனராகம்' படத்தில் ரேவதி மழையில் நனைந்து ஆடும் பாடலைப் பார்த்து இம்ப்ரஸ் ஆன இயக்குனர் சிகரம் கே.பாலசந்தர் 'புன்னகை மன்னன்'னில் நடிக்க வைத்து வான் மேகம் பூப்பூவாய் தூவும்னு மழையில் நனைய வைத்து ரசித்து பாடலைப் படமாக்கினார். இப்படி இவர் பல படங்களில் நடித்துக்கொண்டு இருக்கும்போது ஒளிப்பதிவாளர் சுரேஷ் மேனனை காதலித்து மணந்தார். குழந்தைகள் இல்லை. கணவரை விட்டுப் பிரிந்து வாழ்கிறார்.

இப்போது படங்கள், சீரியல் என்று நடித்து கொண்டு இருக்கும் ரேவதிக்கு பெண் குழந்தை ஒன்று மூன்று வயதிலுள்ளது. 'எனது அப்பா அம்மா கொடுத்த பரிசு' என்று மட்டும் சொல்லும் ரேவதி வேறு எதையும் மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவில்லை. வாழ்த்துக்கள்.



## இலேசாக குழந்தை பிறக்க யோகா

நடிகை எமி ஜாக்ஸன் தனது கர்ப்பகால ஃபிட்னஸ் குறித்த போட்டோக்களை வெளியிட்டுள்ளார். நடிகை எமி ஜாக்ஸன் தற்போது கர்ப்பமாக உள்ளார். மதராசப்பட்டினம் படத்தின் மூலம் தமிழ் திரையுலகில் நடிகையாக அறிமுகமானார். பின்னர் விக்ரமுடன் தாண்டவம், ஐ, விஜய்யுடன் தெறி, உதயநிதியுடன் கெத்து, தனுஷுடன் தங்க மகன் உள்ளிட்ட பல படங்களில் நடித்தார். சமீபத்தில் ரஜினிகாந்துடன் இவர் இணைந்து நடித்த 2.0 திரைப்படம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் தொழிலதிபர் ஜார்ஜ் பனையோத்துவை காதலிப்பதாக அறிவித்தார். இதைத்தொடர்ந்து மார்ச் மாதம் தான் கர்ப்பமாக இருப்பதாக கூறினார் எமி. திருமணத்துக்கு முன்னரே எமி கர்ப்பமானதால் அவசர அவசரமாக காதலர்கள் இருவருக்கும் நிச்சயதார்த்தம் செய்து வைத்தனர். இந்நிலையில் தற்போது ஒரு புதிய போட்டோவை வெளியிட்டுள்ளார். அதில் கர்ப்ப காலத்தில் ஆரோக்கியமாக இருக்க எனது மனதுக்கும் உடலுக்கும் யோகாதான் மீட்பர் என பதிவிட்டுள்ளார்.

## அரைகுறை 'ஆடை'யில் நடித்த அமலா பால் விளக்கம்




'ஆடை' படத்தில் எந்த தைரியத்தில் அரைகுறையாக நடித்தார் என்பது குறித்து அமலா பால் விளக்கம் அளித்துள்ளார். ரத்னகுமார் இயக்கத்தில் அமலா பால் வித்தியாசமாக நடித்துள்ள 'ஆடை' படம் சமீபத்தில் வெளியாகி உள்ளது. படத்தில் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர், டீஸர், ட்ரெய்லர் ஆகியவற்றை பார்த்து சிலர் வெறுப்பு அடைந்தனர். காரணம் அமலா பால் அரைகுறை நிர்வாணமாக நடித்தது தான். இருப்பினும் அவரின் தைரியத்தை பலரும் பாராட்டினார்கள். அவர் இது குறித்து பிரபல ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில், "சினிமா ஹீரோயினுக்கு முக்கியத்துவம் உள்ள கதை என்று கூறி என்னைத் தேடி வந்த கதைகள் எல்லாம் பொய். அதனால் சினிமாவை விட்டு விலகி விட விரும்புவதாக என் மேனேஜரிடம் கூறினேன். பலாத்காரம் செய்யப்பட்ட பெண், கஷ்டங்களை தாண்டி பழிவாங்குவது அல்லது கணவருக்கு ஆதரவாக இருக்கும் மனைவி, தியாகம் செய்யும் தாய் போன்ற கதாபாத்திரங்களில் நடிக்க எனக்கு விருப்பம் இல்லை. சினிமாவை விட்டு விலக நினைத்த நேரத்தில்தான் 'ஆடை' படத்தின் கதை சுருக்கம் வந்தது. அதை படித்தபோதே அதிர்ச்சி அடைந்தேன். இது தமிழா, இந்தியா, ஆங்கிலப் படமா என்று வியந்தேன். இந்த படத்தை தயாரிக்கவும் ஒரு தயாரிப்பாளர் இருக்கிறார் என்பதை தெரிந்து மேலும் அதிர்ச்சி அடைந்தேன். ரத்னகுமார் என்னை சந்தித்து கதை சொன்னபோது இது ஒரிஜினல் ஸ்க்ரிப்ட் என்று எனக்கு தோன்றவில்லை. இது ஏதாவது ஆங்கில படத்தின் ரீமேக்கா என்று இயக்குநரிடமும் கேட்டேன். நிர்வாணமாக நடிக்கும் காட்சியில் சிறப்பு உடை அணியலாம் என்றார் தயாரிப்பாளர். அது பற்றி எல்லாம் கவலைப்பட வேண்டாம் என்று நான் தெரிவித்தேன். நிர்வாணமாக நடிக்க வேண்டிய நாள் வந்தபோது பதட்டமாக இருந்தது. படப்பிடிப்பு தளத்திற்கு சென்றபோது தான் பதட்டம் ஏற்பட்டது. செட்டில் என்ன நடக்கப்போகிறது, யார் யார் எல்லாம் இருப்பார்கள், போதிய பாதுகாப்பு இருக்குமா என்று பயம் வந்தது. செட்டில் 15பேர் மட்டுமே இருந்தார்கள். படக்குழு மீது இருந்த நம்பிக்கையில் தான் இந்த காட்சியில் நடித்தேன்.



முழுப்படத்தை பார்க்காமலேயே விமர்சிப்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள். அதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது" என்று அமலா பால் தெரிவித்துள்ளார்.

# மனசுக்கு எது பிடிக்குதோ அதை மட்டுமே செய்கிறேன்

## தமிழ் சினிமா மார்க்கண்டேயன் பேசுகிறார்



நடிகர் சிவகுமாரை தமிழ் சினிமாவின் 'மார்க்கண்டேயன்' என்பார்கள். ஓவியர், எழுத்தாளர், பேச்சாளர் எனப் பல திறமைகள் வாய்க்கப்பெற்ற மகா கலைஞன். பலருக்கு ரோல் மாடல். அவருக்கும் மன அழுத்தம் ஏற்பட்ட தருணங்கள் உண்டு. அவற்றை அவர் கடந்தது எப்படி என்பதை இங்கு விவரிக்கிறார்:

"நான் கிராமத்துலருந்து எதையாவது சாதிக்கணும்னு சென்னைக்கு வந்தவன். படங்கள்ல வாய்ப்பு வந்தாலும் சரி, வரலைன்னாலும் சரி, குறுக்குவழியில போய் அதைக் கைப்பற்றணும்னு நினைச்சதில்லை. நான் அறிமுகமான படம் 'காக்கும் கரங்கள்'. ஆனா, எனக்குப் பெரிய அளவுல பேரு வாங்கிக் கொடுத்த படம் 'கந்தன் கருணை'. அந்தப் படத்துல முருகன் கதாபாத்திரத்துக்காக, எனக்கிருந்த சிங்கப்பல்லைப் பிடுங்கிட்டேன். அதைக் கேள்விப்பட்டு, இயக்குநர் ஏ.பி.நாகராஜன் ரொம்பவும் ஆச்சரியப்பட்டார்.

சொந்த ஊருக்குப் போய், குடும்பத்தோட அந்தப் படத்தைப் பார்க்க முடிவு பண்ணினேன். கிளம்புற நேரத்துல, 'எம்.ஜி.ஆரைச் சுட்டுட்டாங்க'னு செய்தி பரவ ஆரம்பிச்சிடுச்சு. ரொம்பவும் டென்ஷனாயிட்டேன். கோவை ராயல் தியேட்டர்ல படம் பார்த்தேன். பலரும் என்னை அடையாளம் கண்டுபிடிச்சுப் பாராட்டினாங்க. ஆனா, காரில் வந்தப்போதான் பட போஸ்டர்கள்ல சாணி அடிச்சிருந்ததை கவனிச்சேன். அன்னிக்கு முடிவு பண்ணினேன்... 'ரசிகர் மன்றம் வெச்சுக்கக் கூடாது. யாரோடும் சார்புநிலை எடுக்கக்கூடாது'னு. அதை விடாமக் கடைப்பிடிச்சேன். சினிமாவுல இரண்டாம் கட்ட ஹீரோவா நடிக்க வேண்டியநிலை வந்ததும், 'ராஜாவா இருந்து தளபதியாகிட்டோம். இனி கீழே போக வேண்டாம்'னு முடிவு பண்ணி ஒதுங்கிட்டேன்.

1999-ம் வருஷத்துலருந்து 2005-ம் வருஷம் வரைக்கும் 'சித்தி', 'அண்ணாமலை' சீரியல்கள்ல நடிச்சேன். சினிமாவுலகூட பெரிய சம்பளம் கிடையாது. ஆனா, சீரியல்ல பத்து நாள் நடிச்சா 10 லட்ச ரூபாய் சம்பளம் கொடுப்பாங்க. அதுக்குப் பிறகுதான் புது காரெல்லாம் வாங்கினேன்.

'பாசமலர்'ல சிவாஜி நடிக்காத நடிப்பா? 'கைவீசம்மா கைவீசு'னு கடைசியில தன் தங்கச்சி குழந்தையோட பாடுவாரே... அந்தக் காட்சியில நடிக்கிறதுக்கு இயக்குநர் பீம்சிங்கிட்ட, 'எனக்கு ஒருநாள் அவகாசம் வேணும்'னு கேட்டுட்டுப் போய் மறுநாள் வந்து நடிச்சார். செட்டே ஆடிப் போயிடுச்சி. பீம்சிங் கட் சொல்லவே மறந்துட்டார்னா பார்த்துக்கங்க. அதையெல்லாம் பார்த்தவன் நான்... 2005, ஜனவரி மாசம், 19-ம் தேதி ஒரு முடிவு எடுக்க வேண்டிய கட்டாயம். சீரியல்ல நடிச்சுக்கிட்டிருந்தப்போ, 'என்ன சார்... சீரியலுக்கெல்லாம் இவ்வளவு டென்ஷனாகுறீங்க. 40 வருஷம் நடிச்சேங்கிறீங்க, ப்ராம்ப்டிங் இருக்கு சார். டப்பிங்கல அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்'னு 16 வயசு பொண்ணு ஒருத்தங்க சொன்னாங்க... செருப்பைக் கழட்டி, மூஞ்சியில அடிச்ச மாதிரி இருந்துச்சு. 'நடிப்புக்கு மரியாதை போயிடுச்சு. இனி சாகிறவரைக்கும் மேக்கப் போட மாட்டேன்'னு முடிவு பண்ணினேன்.

அதுக்குப்பிறகுதான் கம்ப ராமாயணம் வாசிப்பிலும் ஆய்விலும் இறங்கினேன். சொற்பொழிவுகள் பண்ண ஆரம்பிச்சேன். சத்யராஜ் என் நிகழ்ச்சிகளுக்குத் தொடர்ந்து வருவார். 'கம்ப ராமாயணத்துல 10,000க்கும் மேற்பட்ட பாடல்கள். அதையெல்லாம் ஆயிரம் பாடல்களாகச் சுருக்கி, அதுலருந்து 100 பாடல்களைத் தேர்வு செய்து, ஒட்டுமொத்த கம்ப ராமாயணத்தையும் ரெண்டு மணி நேரம், பத்து நிமிஷத்துல சொல்லியிருக்கீங்க. யாராலும் பண்ண முடியாது. தொடர்ந்து செய்யுங்கனு ஒருநாள் அவர் சொன்னார். என் மனசுக்கு எது பிடிக்குதோ, அதை மட்டும்தான் செய்யறேன். இதுல பல தடங்கல்கள் வரத்தான் செய்யும். ஆனா, உண்மை, ஒழுக்கம், உழைப்பு மூணும் இருந்தால், நிச்சயம் நம்மால் வெற்றிபெற முடியும்.

ஆரம்பத்துல புதுப்பேட்டையில நான் தங்கியிருந்த விடுதியில 22 பேருக்கு 2 டாய்லெட்தான் இருந்துச்சு. லேட்டா எழுந்து டாய்லெட் போனா நாத்தம் அடிக்கும். குறுகலான அறைகளுள்ள இடம்கிறதால ரொம்பக் கஷ்டமா இருந்துச்சு. அதனால விடியற்காலை நாலரை மணிக்கெல்லாம் எழுந்து டாய்லெட் போவேன். அப்போ வந்தது இந்தப் பழக்கம். 6 மணி வரைக்கும் என்ன பண்ணுறதுனு யோசிச்சப்போ வந்ததுதான் யோகாசனம் செய்யும் பழக்கம். ஒன்றரையணா டீ குடிக்கிறதுக்கு பதிலா, ஒரு மசால் தோசை சாப்பிட்டா சைக்கிள் மிதிச்சுட்டுப் போக வசதியா இருக்கும்னு முடிவு பண்ணி, டீ குடிக்கிறதை நிறுத்தினேன். என் நாக்குல டீ, காபி பட்டு 57 வருஷமாகுது. எதுலயும் ஒரு வைராக்கியம்... முடிவு எடுத்துட்டா, அதைச் செயல்படுத்துறதுல ஒரு லட்சியம்... இந்தப் பழக்கங்களாலதான் என் மனசு, உடம்பு ரெண்டும் ஆரோக்கியமா இருக்கு" என்கிறார் சிவகுமார்.

16ம் பக்க தொடர்ச்சி

**புலம்பெயர் கதை-8**

# அர்த்தங்கள் புரிவதற்கில்லை

*கடைசியில் ஒரு தரகரின் அறிமுகத்தோடு அந்த ஊர் பிறப்பு இறப்புப் பதிவாளருடன் ஒரு வீட்டைக் கண்டுபிடித்து தாயைத் தேடி அங்கு போனார்கள்.*

*தாய் அறுபதைத் தாண்டிய நிலையில் கதிரையில் அமர்ந்திருக்க வளர்ந்த ஒரு ஆண் மகனும் பெண்மகளும் தாயின் அருகே நின்றார்கள்.*

*சுமதி அந்த வயோதிப மாதுவைக் கண்டதும் கட்டிப்பிடித்து அழுதாள். அந்த மாதுவின் பிள்ளைகளையும் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தாள்.*

*சிறிது நேரம் இருந்த பின்பு பிறப்பு, இறப்பு பதிவாளரின் வேண்டுகோளின்படி DNA பரிசோதனை செய்யவேண்டும் என்று அந்தத் தாயை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றார்கள். DNA ஆய்வுக்கான இரத்தமும் தலைமயிர் மற்றும் தோலில் சுரண்டி சில கலங்களும் எடுக்கப்பட்டது.*

*முடிவுகள் வர மூன்று வாரங்கள் ஆகும் என்று DNA TEST ஆய்வாளர்கள் சொல்ல சுமதியும் மேனனும் திரும்பி லண்டன் வந்துவிட்டார்கள்.*

*ஒவ்வொரு நாளும் எதிர்பார்ப்புடன் DNA முடிவுகளுக்காக காத்திருந்தாள் சுமதி.*

*மூன்று வாரங்கள் கழித்து DNA முடிவுகளும் வந்தன. சுமதியின் DNA-யும் அந்த வயோதிப மாதுவின் DNA-யும் பொருந்தவில்லை.*

*சுமதிக்கும் மேனனுக்கும் அதிர்ச்சியாகவிருந்தது. கருவறைத் தாயைக் கண்டுபிடிக்க முடியாமல் விக்கி விக்கி அழுதாள் சுமதி. மேனன் அவளைத் தேற்றினான்.*

*"நீ கொடுத்து வைச்சது அவ்வளவுதான்" மேனன் சொன்னான்.*

*"இனி இந்தத் தேடலை விட்டுவிடுவம்." சுமதி சொல்ல மேனன் தலையை ஆட்டினான்.*

*ஆனால், பாக்கியத்துக்கும் சுமதியின் தந்தை மோகனுக்கும் மாத்திரம்தான் அவள் எப்படிப் பிறந்தாள், சுமதியை அவளது தாய் ஏன் ஆஸ்பத்திரியில் விட்டுச் சென்றாள் என்ற உண்மை தெரியும். அவற்றை சுமதிக்கு சொல்லிவிட்டால் தன்னைப் பெற்றெடுத்த கருவறைத்தாயைக் காணாவிட்டாலும் அவள் மீது வெறுப்பு வந்துவிடக்கூடாது என்பதற்காக, சந்தர்ப்ப சூழ்நிலைகளும் அதற்கு ஏதுவாக அமைந்துவிட, நிஜங்களை மறைத்துவிட்டார்கள்.* ●

# மனம் நெகிழச்செய்த இறுதி அஞ்சலி



## திருமதி சிறிபாலகெங்காதேவி இராஜரத்தினம் (பாப்பா)

யூலை 12ம் திகதி திடீரென இயற்கை எய்திய ‘பாப்பா’ என்று அழைக்கப்பட்ட திருமதி சிறிபாலகெங்காதேவி இராஜரத்தினம் அவர்களின் மரணச்சடங்குகள் சென்ற மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிரித்தானிய தமிழர் சமூகத்தின் பல்வேறு தரப்பினரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் இடம்பெற்றது.

தென்கிழக்கு இலண்டனில் நடைபெற்ற இறுதி நிகழ்வில் சமூகத்தின் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தோர் கலந்துகொண்டமையை அவதானிக்க முடிந்தது. சமயக்கிரியைகளை அவருடைய கணவர் திரு. இராஜரத்தினத்துடன் இணைந்து சகோதரர்களான சிறிகெங்காதரன் ( சமூக சேவையாளர், அரசியலாளர் கெங்கா), சிறிபாலகெங்காதரன் (யாழ்ப்பாணத்தின் பிரபல விளையாட்டு வீரர் ரவி), சிறிசபேசன் (எழுத்தாளர், கவிஞர் சபேசன்) ஆகியோர் இணைந்து செய்தமை வித்தியாசமாக இருந்ததுடன் குடும்ப உறவையும் சகோதர பாசத்தையும் எடுத்துக்காட்டியது.

மகாஜனக்கல்லூரி, லுயிசம் சிவன் ஆலயம், தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் பாப்பாவின் சக மாணவிகள், ஐம்பது ஆண்டுகளிற்கு முன்னதாக தெல்லிப்பளையில் இயங்கிய சூட்டிங் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் என்பனவற்றின் சார்பில் மாலைகள் அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் டாக்டர் நவரத்தினம் அவர்களும் சிவன் கோயிலின் சார்பில் அருள்தாஸ் அவர்களும் அஞ்சலி உரையாற்றினர். குடும்ப நண்பர், அரசியலாளர் சிவலிங்கம், பெறாமகன் ஜனகன் ஆகியோரின் உரைகள் அனைவரையும் நெகிழச் செய்தன.

பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்ட இறுதி அஞ்சலியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆனந்தசங்கரியும், யூனியன் கல்லூரியின் இன்றைய அதிபர் திரு. வரதனும், இலங்கை தூதுவராலயத்தின் சார்பில் ஜனாப் கலீமும் கலந்து கொண்டமையை அவதானிக்க முடிந்தது.

**காலம்சென்ற திருமதி சிறிபாலகெங்காதேவி இராஜரத்தினம் அவர்களுக்கு ‘புதினம்’ பத்திரிகையும் தனது அஞ்சலியைத் தெரிவிக்கிறது.**

# 23 வருடங்களின் பின் டில்லியில் இனி புலிபோல் உறுமுவார் வைகோ!



23 வருடங்களுக்கு பிறகு மீண்டும் நாடாளுமன்றத்தில் எம்பியாக அடிஎடுத்து வைத்துள்ள மதிமுக பொதுச் செயலாளர் வைகோவுக்கு எம்.பிக்கள் வாழ்த்து தெரிவித்தனர். வைகோ இயல்பாகவே உணர்ச்சி பொங்க பேசி மக்களை கவரக்கூடியவர். இவர் கடைசியாக 1999ம் ஆண்டு சிவகாசி தொகுதி எம்.பியாக தேர்வாகி நாடாளுமன்றம் சென்றார். அதன்பிறகு நடந்த எந்த தேர்தலிலும் வைகோ எம்.பியாகவில்லை. வைகோவின் அரசியல் நகர்வுகள், அதிமுக, திமுக என மாறி மாறி இருந்த நிலையில், இடையில் தேமுதிக தலைமையில் தனி அணியும் அமைத்து பார்த்தார். ஆனால், அதற்கு முற்றிலும் வரவேற்பு இல்லாத நிலையில், மீண்டும் திமுகவுடன் கைகோர்த்தார். இந்த சூழலில் திமுக சார்பில் ராஜ்யசபா எம்.பியாக நிறுத்தப்பட்டு போட்டியின்றி வைகோ வெற்றியும் பெற்றுள்ளார். அதேநேரம் எம்.பியாக தேர்வு செய்யப்படவிருந்த நேரத்தில் தேசதுரோக வழக்கில் வைகோவுக்கு நீதிமன்றம் ஓராண்டு தண்டனை விதித்தது. இதனால் எம்.பியாவாரா என்று பரபரப்பு நிலவிய நிலையில், வெற்றிகரமாக எம்.பியாக பதவியேற்றுள்ளார். நாடாளுமன்றம் சென்றவுடன் வைகோ அங்கிருந்த அண்ணாவின் சிலை காலை தொட்டு வணங்கினார். இதேபோல் காமராஜர் மற்றும் முத்துராமலிங்க தேவரின் சிலைகளுக்கும் மரியாதை செலுத்தினார். இதை பார்த்து எம்.பிக்கள் பலர் நெகிழ்ந்தனர்.

இந்நிலையில் எம்.பியாக பதவியேற்ற வைகோவுக்கு அங்கிருந்த திமுக எம்.பிக்கள் உள்பட பல எம்.பிக்கள் வாழ்த்து தெரிவித்தனர். முதல்நாள் எம்.பியாக பதவியேற்ற வைகோ மறுநாளே ஹைட்ரோகார்பன் திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் நடத்திய போராட்டத்தில் பங்கேற்றனர்.

வைகோ இனி நாடாளுமன்றத்தில் புலி போல் உறுமுவார் என்றும் சிங்கம் போல் கர்ஜிப்பார் என்றும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். பொதுவாக எந்த பிரச்னை குறித்து பேசினாலும் வைகோ புள்ளி விவரத்தை பட்டியலிட்டு அழகாக பேசுவார் என்பதால், நாடாளுமன்றத்தில் மத்திய அரசின் எந்த திட்டங்கள் தமிழகத்திற்கு எதிராக இருந்தாலும், அதற்கு சிம்மசொப்பனமாக இருப்பார்.




# லண்டனில் 36வது கறுப்பு ஜூலை நினைவு

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்களாலும், இனவாதிகளாலும் திட்டமிடப்பட்ட முறையில் இலங்கை அப்பாவித் தமிழர்களை கொடுமைப்படுத்தியும், சொத்துக்களை அழித்தும் கைப்பற்றியும் மூவாயிரம் பேர்வரை படுகொடுலை செய்ததுமான நிகழ்வு. இதனை நினைவூட்டும் விதமாக பிரித்தானிய பிரதமரது இல்லமான 10 டவுனிங் ஸ்ட்றீட்டிற்கு முன்பாக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை நினைவு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## யாழ் இராச்சிய மன்னனின் கடைசி தமிழ் மண்டியிடா வீரம்

லண்டன் திரி சக்தி இலக்கிய சங்கமம் நடத்தும் சட்டத்தரணி எஸ். சிறீக்காந்தலிங்கத்தின் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னன் ‘சங்கிலி குமாரனின் மண்டியிடா வீரம்’ குறும்பட வெளியீட்டு விழா 01.09.2019 சனிக்கிழமை மாலை 4 மணி – 9 மணி வரை CANONS HIGH SCHOOL, SHALDON ROAD, EDGWARE HA8 6AN மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தமிழறிஞர் சட்டத்தரணி செல்லத்தம்பி சிறீக்கந்தராசா தலைமை வகிக்கிறார்.

# மனிதனோ என் செய்வான் பாவம்!





கவிஞர் சிவசிவா அழகன்ராஜ்

போகும் போது
கொண்டு தான்
போவதென்ன?

போன பின்பு
யார் தான்
அழுதாலென்ன?

வாழ்வை முடிப்பதும்
ஏன்?
இறைவன் மனிதனை
வாழாது அழைப்பதும்
ஏன்?

இக் காரியத்தின்
காரணம் தான்
என்ன?

இக் காரணத்தின்
அவசரம் தான்
என்ன?

யார் தான்
ஏற்றிட முடியும்
இறப்பின் சோகத்தை?

யார் தான்
அளந்திட முடியும்
இழந்தவர் கண்ணீரை?

இறைவனோ!
அழைப்பவனாகிறான்,
மனிதனோ!
அழுபவனாகிறான்,

மேலும் இறைவனோ!
அன்பே சிவனென்பவனும்
அவனாகிறான்,

அவன் அன்பின் அளவும்
அவனென்பவனும்
அவனாகிறான்,

கருப்பையில்த் தாங்கி
ஈன்றெடுத்து,
இருகையில்த் தூக்கி
வளர்த்தெடுத்து,

மனிதன்தன் வாழ்வில்ப்
பற்று வைக்கும் நேரம்

இறைவன்
பாவம் பாராது
அழைப்பதும் சரியோ?

தன்னிடம்
பார்த்தும் பாராது
அழைப்பதும் முறையோ?

அன்புக்கு
இறைவன் மட்டும் தான்
சொந்தக்காரனா என்ன?

வம்புக்கு
மனிதன் மட்டும் தான்
பந்தக்காரனா என்ன?

மனிதனோ
என் செய்வான் பாவம்?



ப.வை. ஜெயபாலன்



# உறவுகளுடன் வாழ்ந்த அந்த நாற்சார் வீடு

# இதம் தரும் இனிய நினைவுகள்...

எம் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடித்த அந்த அழகான பரம்பரை வீடு, நாற்சார் வீடு, நடு முற்றம். நாலு திக்கிலும் அறைகள், தலைவாசலுக்கு நறுமணம் வீசும் நடு முற்றம்- மல்லிகைப் பந்தல். நடுவில் அமைந்த வீட்டுக்கு நாற்புறமும் தென்னை, வாழை, கமுகு, தோடை, மாதுளை, கொய்யா என்று பயன் மரங்கள்- வீட்டில் இருந்து படலை வரை இருபுறமும் அழகு தரும் பலவர்ண குறோட்டன் செடிகள், படலையை ஒட்டி செவ்விளநீர் குலை தள்ளி நின்று அழகூட்டும் தென்னைகள், முன்புறம் விழிசிட்டி ஒழுங்கையை ஒட்டி மதிலும், கிடுகு வேலியும், பக்கத்துக் கொல்லங்கட்டி வீதியின் வேலிக்கும் கிடுகுத் தென்னோலை வேலி, பின்புறம், மேற்கு எல்லை என்பனவற்றுக்கு அடுக்காக சீமை கிடுவை, பால் கழுவும் கதியால்கள் நெருக்கமாக நிற்கும் வரிசையான வேலி, வட கிழக்கில், வீதியில் வாசல் கொண்ட எங்கள் உபதபாற்கந்தோர் கட்டிடம். இடையே கிணறு. பாப்பா மாமி வீடு, பெரியப்பா வீடு, சின்னம்மா வீடு என்று எமது வீட்டு எல்லையை ஒட்டிய உறவினர் வீடுகளுக்கும், பனை வளைவுகளுக்கும் இடையே போய்வரக் கூடிய கடவை.

தாய் மண்ணில் எல்லா வீடுகளுமே பெரும்பாலும் இதே அமைப்புத்தான். அந்த இனிய நினைவுகள். அப்பாவுக்கும், சித்திக்கும் சீதனவழி சொத்தான அந்த நாற்சார் வீட்டில் ஒரு பானைச் சோறு உண்டு ஒரே கூரையின் கீழ் ஒற்றுமையாக வாழ்ந்த இதயத்துக்கு இதம் தரும் அந்த எண்ணப்பதிவு, எல்லாமே நினைவில் எழுந்து ஓடவைத்தது அந்த இறப்புச் செய்தி. நாம் நாலு சகோதரர்கள், சித்தியின் மகள், இரு தம்பிகள் என எழுவர் அடங்கிய சந்ததி வரிசையில் என் 2ம் அண்ணரின் இறப்பு இந்த நினைவுகளோடு கருவிழிகளை கண்ணீரில் நீந்த வைத்தன.

ஒரு கார் வீதியும், நாலு ஒழுங்கைகளுக்கும் இடையிலாக கொப்பாட்டன் காலத்துக்கு முன்பிருந்தே எங்கள் உதிரவழி சொந்தங்களின் இருப்பு வீடுகள், பனை வளைவுகளை கொண்டு இருந்த பெருநில பிரதேசத்தில் எங்களின் இந்த நாற்சார் வீடும் ஒன்று. எனக்கு நினைவு தெரிந்த ஒரு பொழுதில்தான் தெல்லிப்பளைக்குள் அமைந்த எங்கள் கொல்லங்கலட்டி வீதிக்கும் மின்சாரம் வந்தது. கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வன்னிய சிங்கம் அவர்களின் தாய் வீட்டை கொண்டிருப்பதால் அந்த வீதிக்கு ஒரு கியாதி. அவர் பெயரில்தான், வன்னிய சிங்கம் வீதி என அது அழைக்கப்படுகிறது. மின்சாரம் வரும் முன்பாக கைவிளக்கு, அரிக்கன் லாம்பு என்பன வெளிச்சம் தந்த காலம்.

கூப்பன் அரிசியும், வளவு விளைவுகளுமே குடும்பத்தின் வயிற்றுப்பாட்டை நிரப்ப போதும் என்றிருந்த காலம் அது. வளவு கிணற்றில் குளிக்கும் நீர் உட்பட சிதறும் நீரை தேக்கி ஓட்ட தக்க வகையில் கிணற்றோடு அமைந்த சீமெந்து கட்டு. கட்டில் நீர் வழிந்து வளவுக்கு ஓட வாய்க்கால். வாய்க்கால் நீரை தேக்க, வாழை கமுகு, பிறபயன்மரங்களுக்கு பாத்தி. பெரிய அந்த வளவில் இருந்த ஐம்பதுக்கு மேலான தென்னைகளுக்கு பட்டைகட்டி அண்ணை துலா மிதிக்க நீர் இறைத்த நினைவும் நிழலாடுகின்றது. மின்சாரம் வந்த பிறகு கிணற்றோடு ஒட்டி நிரப்பப்பட்டிருந்த தண்ணீர் தொட்டியில் மோட்டார் பம்பு நீர் நிரப்ப, குளிப்பதிலும் ஒரு சுகம்.

வீட்டுக்கும், வீதிக்கும் இடையிலான செப்பரத்தம்பூ செடி வேலி மறைப்புக்கும் பெரிய மாட்டுக்கொட்டில். ஆடுகள் தான் நான் அறிய ஆறு, ஏழு அதில் வளர்க்கப்பட்டன. அம்மம்மாவின் வளர்ப்பில் செவியன் சூடு சொரியும் பாலோடுதான் எங்களுக்கு காலை கோப்பி. அந்த கால வழக்கப்படி, அம்மாவையும், கமலா மாமியையும் மருதனாமடம் இராமநாதன் மகளிர் பள்ளிக்கு அனுப்பப் பயன்பட்ட மூடல் இரட்டை மாட்டு வண்டில்; நீண்ட காலம் அந்த கொட்டிலுக்குள் நினைவு சின்னமாக கிடந்தது. முற்றத்தில் குசினிக்கு முன்பாக நித்தம் கிடக்கும் உரல் உலக்கை. மூன்றடுப்பு எல்லாம் மாரி வந்தால் இந்த கொட்டிலுக்குள் வந்து விடும். வாழைக்குலை பழுக்கப்போடும் கிடங்கும் முன்முற்றத்துக்கும் கொட்டிலுக்கும் இடையில், எலுமிச்சை செடியை ஒட்டித்தான் இருந்தது. அண்ணை வளரும்வரை சரவணமுத்து மாமாதான் வாழைக்குலைகளை போட்டு அடுக்கி ஒரு மூலையில் புகை ஊத உட்புறம் வைக்கோல் அடைத்த முட்டியை பொருத்தி விடுவார். காலை மாலை புகை ஊதுவது எங்கள் வேலை. இடைப்பழம் பழுக்கும் வளவுக்குள் விளையும் வாழைக்குலைகள் குசினியை அடுத்த களஞ்சிய அறையில் பரணில் கட்டித் தொங்கும். பிடுங்கி தின்ன வேண்டியதுதான்.

குசினி கிழக்குபக்கம் இருந்த தோடையில்தான் இரவில் கோழிகள் தூங்கும். 19, 21 என்று ஒற்றை விழ முட்டைகளை உமிப்பெட்டிக்குள் அடுக்கி அம்மம்மா அடைக்கோழியை அடைகாக்க வைப்பா. முட்டை வெடித்து 21 நாட்களில் பஞ்சுபோல மென்மையான கோழிக்குஞ்சுகள் வெளிவருவதும் அவற்றுக்கு கறையான் புற்றை வெட்டி கறையான் புழுக்களை உண்ணப் போடுவதும் எமக்கு உற்சாகம் தரும். கோழிப்பீ அள்ள விறாந்தை மூலையில் தென்னம் பொச்சுகள் இருக்கும். கோழி குஞ்சுகளை பருந்து பிடிக்காமல் இருக்க குஞ்சுகளுக்கு குங்கும வர்ணம் பூசுவதும் அந்தகால வழக்கம். அப்படி இருந்தும் முக வெள்ளைகளுடன் பருந்து ஒன்று வட்டம் போட்டு கண்வைத்து கீழே இறங்கி குஞ்சைப் பிடிப்பதும், நாங்கள் கேவும் கோழியோடு கத்திக்கூவி பிராந்தை கலைப்பதும் வழக்கம். விசேட விருந்தினர் வந்தால் அமைவது வீட்டு சேவல்தான். சித்திக்கு பிள்ளை பெத்து வருகுதென்றால் விறாத்துக் குஞ்சுகள் தேவை என்று அம்மம்மா கணக்குப் பார்த்து கோழி அடைக்கு வைப்பா. கோழிக்கு படுவான் வந்தால் நோயில் தூங்கி அடிக்கடி பீச்சி கோழிகள் ஒவ்வொன்றாக சாகும். வீடே அழும். வளவுக்குள் கிடங்கு வெட்டி மண்ணை மூடி நாய் கிளறாமல் இருக்கப் பாரம் வைப்போம்.

அம்மம்மா வளர்த்த ஆடுகள், குட்டிகள் போடுவதும், குட்டிகள் முற்றத்தில் துள்ளித் திரிவதும் அயல் கோயில்களில் வேள்வி வந்தால் கிடாய் ஆடுகள் நல்ல விலைக்கு விற்பனை ஆவதும் வழக்கம். நனையப்போட்ட அரிசியை முற்றத்தில் உள்ள உரலில் இட்டு இரு புறமும் அண்ணைகள் நின்று உலக்கையால் மாறி மாறி இடிப்பதும், அம்மா சுளகில் அரித்து கப்பி அரிசியை மீண்டும் உரலில் போடுவதும், பின்பு மாவை இரும்பு சட்டியில் வறுப்பதும் கூட வாராந்த வீட்டு வேலை. வேலிக்கிழுவை, பூவரசு இலைகள் முற்றத்து பலாமரம் கொட்டும் பழத்தலை இலைகள் என்று ஆட்டுக்கு குழை போடுவதும் எங்கள் வேலை.

வளவு நிறைந்த தென்னைகளின் ஓலைகள்தான் வீட்டு வேலி அடைப்புக்கும் தேவை. கிணற்று கட்டில் தென்னோலைகள் பிரட்டி நனையப் போடப்படும். சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை காலை வேளை அந்த தென்னம் ஓலைகளை பிளந்து தர முற்றத்தில் வைத்து, ஓலைப்பாதிகளை கிடுகாக பின்னுவதும் எங்கள் வேலை. பின் நனவளா பனைக்காணி, நடுபனை வளை என்று பனந்தோப்பு பனம் பழங்கள் ஊற வைத்து பிழிந்து சாறுகள் பனாட்டு ஆகுவதற்காக முற்றத்தில் பாயில் காய்வதும் பனம்பழ பருவத்தில் நடக்கும் சங்கதி. பனையால் விழும் சருகு இலைகள், பன்னாடை, கங்குமட்டை, பனங்கொட்டை, பனுவில் என்பன பொறுக்கி அடுக்கி விறகுக்கு வைக்கப்படுவதும் நாளாந்த வேலை. பனம்பாத்தியில் விளையும் பனங்கிழங்கை கிண்டி எடுத்து அவியல், துவையல் என்று உண்பதும் ஒடியல், பழக்கொடியல் என்று அவை முற்றத்தில் பாயில் வெய்யில் காய்வதும் பருவகாலக் காட்சிகள். நொங்கு, அண்ண முண்ணா பழம், இளநீர் வழுக்கல் என்று அவ்வப்போது உண்ணக் கிடைக்கும் வளவு விளைவுகளை நினைக்க நாக்கு ஊறும்.

நடுமுற்றத்தில், தைப்பொங்கல், சித்திரை பொங்கல், ஆவணி ஞாயிறு பொங்கல் என்று சித்தப்பாவின் ஏற்பாட்டில் கலகலப்பாக நடக்கும்.

நாம் நால்வர், சித்தி, பிள்ளைகள் என்று குசினிக்குள் வட்டமாக பலகையில் குந்தி இருந்து உணவு உண்பதும், கூழ் குடிப்பதும், நடுவில் இருந்து அம்மா பரிமாறுவதும் கூட ஒரு பாச பிணைப்பு. பழஞ்சோற்று குழையலை அம்மம்மா உருண்டையாக்கி நாம் கையில் ஏந்தும் பூவரசம் இலையில் வைப்பதும், கருவாட்டுத் துண்டை கடித்து பழஞ்சோற்றை உண்பதும் இனி எதிர்காலம் தரமுடியாத சுவை.

கல்யாணம், வெளிநாடு என்று எங்கள் வீட்டுக் கூட்டில் இருந்தவர்கள் இன்று நாலு நாடுகளுக்குள் குடும்பத்தோடு அடக்கம்.

போர் வந்தது. புலம் பெயர்ந்தது. ஷெல் அடி, பொப்பர் அடியில் வீடு சிதைந்தது. ஆனாலும் அந்த தாய், தந்தை வழி நிலம், எம் சந்ததி வழி வம்சம் அளைந்து விளையாடிய மண் இன்றும் இருப்பாய் அங்கு இருக்கிறது. நிலையாய் எம் மனதில் நினைவோடு நிலைத்துள்ளது. என்றென்றும் இடையிடையே போகும் எம் சந்ததிகளை வரவேற்க அது அங்கே காலங்கள் உள்ளவரை இருக்கத்தான் போகிறது. ●


ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்
SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE
5 Chapel Road, West Ealing,London W13 9AE
Tel: 0208 810 0835 Fax: 0208 840 0485,
Email: info@ammanealing.org
web: www.ammanealing.org
அம்மன் தேரேறி பவனி வரும் இத்தினத்தில் அர்ச்சனை தட்டு மூலம் பெறப்படும் பணம் தாயகத்தில் ஏழை மாணவர்களின் பட்டப்படிப்புக்கு வழங்கப்படும்.
செப்ரெம்பர் மாத அம்மனின் நிகழ்வுகள்
1. முல்லைத் தீவு அன்னை சாரதா நிலைய அநாதைப் பிள்ளகளை ஆலயம் பொறுப்பேற்றல்.
2. மன்னார், மட்டக்களப்பு கனனி பாடசாலைகளை ஆரம்பித்தல்.
3. மட்டக்களப்பு பட்டுமுறிப்பு கிராமத்தை பராமரிக்கும் பொறுப்பேற்றல்.
இரதோற்சவ அருட்காட்சி (தேர்)- 2019
CHARIOT FESTIVAL - 2019
11.08.2019 ஞாயிறு
காலை 10.00 மணி